விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 09 புதன்கிழமை (23.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 186

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## ஐ.தே.க. எம்.பி. ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் அலரிமாளிகையில் நேற்று விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் விசேட அழைப்பினை ஏற்று தமது குடும்ப சகிதம் இந்த சந்திப்பில் கலந்து கொண்ட (18 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக கே.பி.?

(கொழும்பு)

வட மாகாணத்தில் நடத்தப்படவுள்ள மாகாண சபைத் தேர்தலில் குமரன் பத்மநாதன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிப்பதாக சதி மெத லங்கா பத்திரிகை தெரிவித்துள்ளது.

கே.பிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன. கே.பிக்கு பொது மன்னிப்பு வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல (18 ஆம் பக்கம் பார்க்க)

## 10 ரூபாய் 50 சதத்தால் மாவின் விலை அதிகரிப்பு

ஒரு கிலோ பிறிமா கோதுமை மாவின் விலை ரூ.10.50 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் 63 ரூபாவுக்கு விற்பனை செய் யப்படும் ஒரு கிலோ கோதுமை மா ரூ.73.50 ஆக அதிகரிக்கப்படும் என்று பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவுக்கான வரிச் சலுகையினை அரசாங்கம் நீக்கியதையடுத்தே அதன் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டதாகப் பிறிமா நிறுவனம் தெரிவித்தது. (ச–3,5)

# போர்க் குற்ற ஆலோசனைக் குழு

# ஐ.நா. செயலரினால் அறிவிப்பு

## 4 மாதத்தில் அறிக்கை தயாரிப்பர்

(நியூயோர்க்)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனைகளை வழங்கும் குழுவை நியமித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. இது தொடர்பில் ஐ.நா. நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த-ஜி.எல்.பீரிஸ் நேற்று மாலை திடீர் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் வெளிவிவகார அமைச்சருக்குமிடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இருப்பினும் ஜனாதிபதியுடனான இந்தக் கலந்துரையாடலின் போது எந்த விடயம் குறித்துப் பேசப்பட்டன என்பது குறித்துத் தகவல்கள் வெளியாகவில்லை.

கலந்துரையாடலுக்கான அழைப்பு அவசரமாகவே தனக்குக் கிடைக்கப் பெற்றதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட வெளிவிவகார (18 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பிக்கவின் பேச்சுக்கு மனோ கணேசன் வரவேற்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெலஉறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க யாழ்.நூலகத்திற்குத் தான் சார்ந்த சமூகத்தினால் தீ வைக்கப்பட்டதற்குத் தமிழ்ச் சமூகத்திடம் மன்னிப்புக் கோரியதை வரவேற்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு அவர் மன்னிப்புக் கேட்டது தமிழ்–சிங்கள சமூகங்களிடையே நல்லிணக்கம் ஏற் (18 ஆம் பக்கம் பார்க்க)

## உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோவையில் கோலாகல ஆரம்பம்

(கோவை)

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தமிழ் நாடு, கோவை பீளமேட்டில் உள்ள கொடிசியா வளாகத்தில் இன்று 23 ஆம் திகதி புதன்கிழமை கோலாகலமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

வரலாற்றுப் புகழ்பெற்ற இந்த மாநாட்டில் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல், தமிழக முதல்வர் கருணாநிதி, துணைமுதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து சென்று கலந்து கொண்டுள்ள சிறப்பு அழைப்பாளர்கள், தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், கட்டுரையாளர்கள் உள்ளிட்ட 4 ஆயிரத்து 600 பேரும் பல இலட்சக் கணக்கான மக்களும் பங்கேற்கின்றனர்.

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு இன்று காலை 10.30 மணிக்குத் தமிழ்த் தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகின்றது. துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார்.

மாநாட்டுச் (18 ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. உட்பட 21 பிரதிநிதிகள் வவுனியா சென்று திரும்பினர்

### ஜனநாயக தேசியக் கூட்டமைப்புத் தகவல்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரும் அந்த அமைப்பின் தலைவர்களில் ஒருவருமான கே.பி. மற்றும் 20 வெளிநாட்டுத் தமிழ்ப் பிரதிநிதிகள் அடங்கலாக 21 பேர் வடக்குக்கு விஜயம் செய்துள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புத் தெரிவிக்கின்றது.

இவர்களை அரசாங்கமே கொழும்பிலிருந்து அழைத்துச் சென்று பத்திரமாகக் கொழும்புக்குத் திரும்பி அழைத்து வந்துள்ளதாகவும் ஜனநாயக (18 ஆம் பக்கம் பார்க்க)

## பொஷன் நோன்மதி தினத்தைக் கொண்டாட 2 ஆயிரம் சிங்கள யாத்திரிகர்கள் நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

பொஷன் நோன்மதி தினத்தை முன்னிட்டு 2ஆயிரம் பௌத்த யாத்திரிகர்கள் நாளை காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இவ் யாத்திரிகர்கள் பொஷன் நோன்மதி தினமான நாளை மறுதினம் நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்று பௌத்த மத வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பௌத்த சங்கம் (18 ஆம் பக்கம் பார்க்க)

புதிய முதலீட்டு வாய்ப்பு புதிப்பிக்கப்பட்ட நம்பிக்கை

யாழ் மக்களுக்கான... "பங்குச் சந்தைப் பயன்நுகர்வுக் கருத்தரங்கு"

அனுமதி இலவசம்

இடம்:- பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம், யாழ்ப்பாணம்.

காலம்:- 2010 ஜூன் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை

நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணிவரை

பங்குச் சந்தை பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு:- 021 222 1455/021 567 2444
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்ப்பாணக் கிளை
398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE
www.cse.lk

(1751)

## யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை மாணவிகள் இருவர் தேசியரீதியில் முதலிடம்


பவித்திரா


துளசிகா

(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட தமிழ் மொழித்தினப் போட்டி 2009இல் யாழ்.இந்து மகளிர் மாண விகள் இருவர் முதலிடத்தைப் பெற்றுச்சாதனை படைத்தனர். இதில் பிரிவு ஒன்றுக்கான இசையும் அசைவும் போட்டியில் பவித்திரா குமரகுரு பரனும், ஆக்கத்திறன் போட்டியில் துளசிகா மூர்த்தியும் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ்தினப் போட்டி-2009 இல் ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டமை குறிப்படத்தக்கது. (சு)

## தாமரைத்தடாகத்தில் விழுந்த சிறுமி நீரில் மூழ்கி உயிரிழப்பு

### தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தாமரைத் தடாகத்தில் தவறிவிழுந்த சிறுமி உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுமாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் பண்ணாகத்தைச் சேர்ந்த சிவகணேசன் வேதாரணி (வயது 4) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

தனது தாயாருடன் கோயிலுக்குச் சென்ற சிறுமி ஆலய வீதியைச் சுற்றி வலம்வந்து கொண்டிருந்த நிலையில் தடாகத்தை எட்டிபார்த்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (சு)

## துரையப்பா விளையாட்டரங்கில் இன்று ஒலிம்பிக்தினக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஒலிம்பிக் தின நிகழ்வுகள் இன்று புதன் கிழமை துரையப்பா விளையாட்டரங்கில் கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்வில் வீதியோட்டம், சைக்கிள் ஓட்டம் என்பவற்றில் பங்குபற்ற விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களை பொறுப்பாசிரியருடன் பிற்பகல் 2.00 மணிக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேற்படி ஓட்ட நிகழ்வில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களும் பாடசாலைச் சீருடையுடன் சமுகமளிக்க வேண்டும். பிற்பகல் 2.00 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் பொறுப்பாசிரியர்கள் தமது மாணவருக்கான ஒலிம்பிக் ரீசேட்டைப் பெற்று மாணவரை ஓட்ட நிகழ்விற்கு தயார்ப்படுத்த வேண்டும்.

ஒலிம்பிக்தினத்தையொட்டிமாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டிகள், வினாடி வினாப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பெறுமதிமிக்க பரிசில்களும் இந்நிகழ்வில் வழங்கப்படும்.

எனவே சகல மாணவர்களையும் நிகழ்வில் பங்கு பற்றுமாறு கேட்கப்படுகின்றனர். இந் நிகழ்வில் யாழ். மாவட்ட சகல 1AB,1C பாடசாலைகளுக்கும் ஒலிம்பிக் குழுவினரால் நூலகங்களுக்கான ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்படவுள்ளன. அதிபர்கள் பங்குபற்றி இந் நூல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

நூல்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் பெறும் பாடசாலைகள் தமது பாடசாலைக் கொடியுடன் சமுகமளித்துச் சிறப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு ஒலிம்பிக்தின ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். (சு)

## வீடுகள் ஒப்படைப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த தனியாருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றை உரியவர்களிடம் கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இராணுவம் அறிவித்துள்ளது. முல்லைத்தீவில் படையினரின் முதலாவது பிராந்திய தலைமையகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வீடுகள் மற்றும் கட்டிடங்களை உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்படும்என்றும் அதில் கோடி காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## TOEFL பரீட்சைகள் யாழ். எம்.சி.எஸ் இல்

(கொழும்பு)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறவும், (Work Permit, Skill Migration) வெளிநாடுகளில் குடியேறுவதற்கும் தேவையான ஆங்கில அறிவிற்கான தகைமையைதரும் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங் களுக்கான TOEFL பரீட்சைநிலையமாக யாழ். எம்.சி.எஸ். தகவல் தொழில் நுட்ப வளாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியை பயில விரும்புவோர் இல. 324 பலாலிவீதி, பரமேஸ்வராசந்தியருகில் அமைந்துள்ளஎம்.சி.எஸ்.தொழில் நுட்ப வளாகத்துடன் தொடர்பு கொள்ளவும். (ச-5)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES &
EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

BCHS | Eisc

ஆகிய இவ்விரு சகோதர நிறுவனங்களும் இணைந்து
எமது நிறுவனத்தின்மூலம் Student Visaவினைப் பெற்று
London (UK) சென்ற அனைத்து மாணவர்களையும்
பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

எமது யாழ். கிளையிலே அடிப்படைக் கற்கைநெறிகளை நிறைவுசெய்து இவ்வருடத்திலே இதுவரை (UK) London Visa பெற்று சென்ற பல மாணவர்களிற் சிலர்



SHANKANAI | INUVIL | NALLUR | INUVIL | ALAVEDDY


INUVIL | JAFFNA | VARANY | MANIPAY | CHUNNAKAM


இதுவரை எமது சேவையினூடாக இலங்கையிலிருந்து 1200க்கு மேற்பட்ட மாணவர்கள் LONDONல் உயர்கல்வியினைக் கற்பதற்காக UK Visa வினைப் பெற்றுச்சென்றுள்ளார்கள். நீங்களும் அவர்கள்போற சென்று கல்விகற்று முன்னேற வேண்டுமா?... உங்களின் நல்ல எதிர்காலத்துக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்....

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550, 0773501499

No.30 1/14, W A De Silva Mw, Colombo - 06
Tel : 0112500207, 0777222422, 0714299935

(C-506)

யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

100% நல்ல சம்பளம்

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை : G.C.E. (O/L) போதுமானது
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

Access Programming
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

Diploma in English | Advanced Diploma in English
100 % பயிற்சி
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

Certificate In Personality Development / ஆளுமை விருத்திசெய்யும் பயிற்சி நெறி

ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!!!

➤ இன்று எமது பிரதேசத்தில் புதிய நிறுவனங்கள், வங்கிகள் தமது கிளைகளை திறந்தும் தகுதியானவர்களை அடையாளங் காணாத காரணத்தினால் அத்தொழில் வாய்ப்புக்கள் கைநழுவுகிறது. நீங்கள் பட்டங்களையோ, வேறு பல சான்றிதழ்களையோ வைத்திருப்பதினால் உங்களுக்கு வேலைகிடைத்துவிடுவதில்லை. எமது இப்பயிற்சி நெறியின் முக்கிய நோக்கம் எம்மவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உறுதி செய்வதே. ஆகவே இன்றே எம்முடன் இணைந்து உங்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள்....
➤ இப்பயிற்சி நெறியின் மூலம் Interview வை எவ்வாறு எதிர்கொள்வது அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது, அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலப்பயிற்சிகள்,Computer பயிற்சிகள், HR Management, Management, etc...etc.....என பலவிடயங்களை உள்ளடக்கியது. (01 Month)

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்கு சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

இப்பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியில் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலைவாய்பை பெற ஆவண செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0773501499 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 19.06.2010, 23.06.2010, 25.06.2010
காலை : 10.00 மணி
மாலை : 04.00 மணி

# இன்று ஒரு தகவல்

## உயிர் நம் கையில்

ஒரு சினிமாப்படம் பார்த்தேன். அதில் ஒரு காட்சி இப்படி இருந்தது.

ஒருத்தர் மரணப்படுக்கையில் கிடந்தார். வெளிநாட்டிலிருந்து அவருடைய பையன் வருகிறான். அந்தப் பையன் விமானத்திலிருந்து இறங்கி ஒரு காரைப்பிடித்து வீட்டுக்கு வந்து சேர்கிறான்.

அப்பாவைப் பார்க்கிறான். அப்பா பையனைக்கண்டதும் மெதுவாக வாயை திறந்து ,

"உன்னை ஒருதரம் பார்த்துவிட்டு கண்ணை மூட வேண்டும் என்பதற்காகத்தான் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தேன்" என்றார்.

அதேமாதிரி பையனைப் பார்த்துக் கொஞ்ச நேரத்தில் கண்ணை மூடிவிட்டார். அந்தப் படத்தைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த போது ஒரு நண்பர்,

"சினிமாவில் தான் இப்படியெல்லாம் நடக்கும்" என்றார்.

"எதைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"பையன் வெளிநாட்டிலிருந்து வந்து சேரும் வரைக்கும் மரணப்படுக்கையில் கிடக்கும் அப்பா உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருப்பதென்பது சினிமாவில் தான் சாத்தியம். நடைமுறையில் அது சாத்தியமில்லை. வேளை வந்தால் போய்ச்சேர வேண்டியது தான்" என்றார்.

இவர் இப்படிச் சொல்வது "சரி" என்றுதான் நமக்கெல்லாம் தோன்றுகிறது.

ஆனால் கலிபோர்னியாவில் நடந்த ஒரு ஆராய்ச்சியின் முடிவு வேறுமாதிரி இருக்கிறது.

"மரணத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட வேண்டுமா? அது மனிதனால் முடியும்." என்கிறது இந்த ஆராய்ச்சி முடிவு.

சரி எவ்வளவு காலம் தான் தள்ளிப் போட முடியும்? என்று கேட்டால், ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அது முடியும் என்று சொல்கிறார்கள். அடுத்து வரப்போகும் ஒரு முக்கியமான நாள் வரைக்கும் நாம் இருக்க வேண்டுமென்று நினைத்தால் அது முடியுமாம்.

இப்ப உதாரணத்துக்கு, ஒருத்தர் மரணப்படுக்கையில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருடைய மகனுக்கு அல்லது பேரனுக்கு இன்னும் 10 நாட்களில் திருமணம் நடக்கப் போகிறது. அல்லது அவர்களுடைய குடும்பத்தில் ஏதோ விஷேஷம் வரப்போகிறது.

சாகக் கிடப்பவர் அந்த சந்தோஷத்துக்காக காத்திருக்க ஆரம்பித்துவிட்டார் என்றால் அவருக்கு உயிர்போகாதாம்.

சீனாவில் அறுவடைத்திருநாள் என்பது மிகவும் விஷேமான திருவிழா. சனங்களெல்லாம் சநதோஷமாக கொண்டாடும் திருவிழா. அந்த திருவிழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன் சராசரியாக அங்கு இறப்பவர்களின் எண்ணிக்கை 35 சதவீதம் வரைக்கும் குறைகிறதாம்.

ஆனால் அதே அறுவடைத் திருநாளைத் தொடர்ந்து வரும் அடுத்தவாரத்தில் இறப்பு 35 சதவீதம் வரைக்கும் அதிகரிக்கிறதாம்.

இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தார்கள். அதன்படி, ஒரு மகிழ்ச்சியான விடயம் காத்துக் கொண்டிருக்கும் போது மரணத்துடன் போராடுபவரின் மனவலிமை அதிகரிக்கிறதாம்.

அந்த மகிழ்ச்சியான அனுபவத்தை- இறப்பின் மூலமாக நாம் இழந்து விடக்கூடாது என்ற எண்ணம் மேலோங்குகிறதாம்.

ஆனால் ஒரு விடயம். இதற்கு அதிகமான மனோதிடம் அவசியம்.

இது ஒரு பத்திரிகையில் நான் பார்த்த குறிப்பு. இதை எத்தனைபேர் ஒத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இருந்தாலும் - இப்பவும் கடைசி நேரத்தில் வைராக்கியமாக இருந்து நினைத்ததை சாதித்து விட்டு மேலே போகிறவர்கள் பலர் உண்டு. அதை நீங்கள் அனுபவத்தில் பார்த்திருக்லாம்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், நமது மனம் வலிமையாக இருந்தால் உடம்மைப் பத்திரமாக வைத்திருக்க முடிவதுடன் உயிரையும் பிடித்து வைத்திருக்கமுடியும்.

ஒரு பெரியவர் மரணப்படுக்கையில் இருந்தார். வெளிநாட்டிலிருந்து விமானத்தில் அவரது மகன் வந்து கொண்டிருந்தார். டாக்டர் தீவிர சிகிச்சை கொடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அந்த டாக்டரைப் பார்த்து,

"என் பையன் இங்கே வந்து சேரும் வரைக்கும் நான் இருப்பேனா டாக்டர்" என்று கேட்டார்.

"நான் இருக்கிறேன். கவலைப்படாதீங்க" என்றார் டாக்டர். அதற்கு அந்தப் பெரியவர்,

"நீங்க இருப்பீங்க டாக்டர். நான் இருப்பேனா? என்று கேட்டேன் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழாவைமுன்னிட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் மற்றும் ஆறுதல் பரிசுக் குரியோரின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**பேச்சுப்போட்டி**

**கீழ்ப்பரிவு**

சி.மதுரங்கன், இ.கார்த்திகா (கொக்குவில் இந்துக்கல்லூரி)

**இருவர் மூன்றாமிடம்**

இ.ஜனரஞ்சனி, ர.லக்ஷிகா (கொக்குவில் இந்துக்கல்லூரி)

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

தெ.ஜனனி, கு.சரண்ஜா, (கொக்குவில் இந்துக்கல்லூரி) வி.வக்சாஸ்கித சர்மா (இந்துக்கல்லூரி)

**மத்திய பிரிவு**

ஆ.ஹரிசங்கர் ( இந்துக்கல்லூரி) , சு.கமில்றன்( சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி) , உ.சாந்திகா (கொக்குவில் இந்துக்கல்லூரி) ,

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

ப.பிரதீஸ் (இந்துக்கல்லூரி) , த.தஸ்மினி (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி), கே.கௌசிகன் (மகாஜனாக் கல்லூரி),

**மேற்பிரிவு**

க.வசீகரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி),க.உசாந்தன் (இந்துக் கல் லூரி), ச.ஜேனுஷா (வட்டு. இந்துக்கல்லூரி),

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

த.நாராயணி, ச.சஞ்சீவன், இ.சாமந்தி(கொக்குவில் இந்துக் கல்லூரி)

**கவிதைப்போட்டி**

ப.ஜெனகன், செ.கோபிகா (யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி)

உ.ஜெபப்பிரியா(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**ஆறுதல் பரிசுகள் பெற்றோர்**

ப.கௌசிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), இ.யுவராஜ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), பா.சங்கீதரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**கட்டுரைப் போட்டி**

**மேற்பிரிவு**

ந.துஷாந்தி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) கி.பிறைநிலா (கொக்குவில் இந்துக் கல்லூரி), மா.தீபிகா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

செ.கோபிகா ,சி.சகானா (யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி), சி.நிரூபன் (ஹாட்லிக் கல்லூரி). (6-4)

# சட்டவிரோத கசிப்பு வைத்திருந்தவருக்கு சிறைத்தண்டனையும் அபராதமும்

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த குற்றச் சாட்டில் கரவெட்டி துன்னாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பரு.நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா, குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அவருக்கு ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் அபராதமும் ஒரு வருடகால கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கினார்.

மேலும் அபராதம் செலுத்தத் தவறின் 36 மாத கால கடூழிய சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

குற்றவாளி இத்தீர்ப்புக்கெதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததையடுத்து யாழ். மேல் நீதிமன்றம் இவ்வழக்கை கடந்த 15.06.2010 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. இவ்வழக்கை விசாரித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி.எஸ்.பரமராஜா, குற்றவாளிக்கு 1 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் அபராதமும் ஒரு வருட கால கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கியதுடன் அபராதம் செலுத்தத்தவறின் மேலும் 2 வருட கால கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தார். (6-24)

# முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்படும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரிபால்ன சபைத்தலைவர் சோ. பரமநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அபிராமி அந்தாதி ஓதுதல் என்னும் விடயம் பற்றி கவிமணி க.ஆனந்தராசா கருத்துரை வழங்கவுள்ளார். (6-4)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞானசக்தி கணேசநாதன்எழுதிய முன்பள்ளி-ஆரம்பக்கல்வியில் அழகியல் நூல்வெளியீட்டுவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து நூல் வெளியீட்டுரை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வழங்கவுள் ளதுடன் நூலின்முதற்பிரதியை யாழ்.முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

மேலும் நூல்மதிப்பீட்டுரையை யாழ்.தேசியகல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் வழங்கவுள்ளார். தொடர்ந்துகலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (4)

# இராசி பலன்

23.06.2010
(ஆனி 9, புதன்கிழமை)
துவாதசி பிற்பகல் 5.45 மணிவரை
விசாகம் முன்னிரவு 8.34 மணிவரை
இராகுகாலம் 11.54-1.24 மணிவரை
சுபநேரம் 4.24-5.54 மணிவரை
பிரதோச விரதம் ,சித்தாமிர்தம்.

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத மனஸ்தாபம், செய்தொழில் நன்மை, பிறருக்கு உதவுதல், போசன சுகம். |
| இடபம் | நண்பர்கள் சந்திப்பு, அதிக பிரயாசை, பிரயாண சுகம், தேக நலன். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| கடகம் | புத்திரரால் கவலை, தொழில் மந்த நிலை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| சிங்கம் | மனச்சஞ்சலம், தொழிலில் ஆர்வம், கல்வியில் ஆர்வம், சுபசெலவு. |
| கன்னி | இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை, தன்னம்பிக்கை. |
| துலாம் | வீண்பகை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி தாமதம், தனவிரயம். |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, சிந்தனை மிகுதி, புதியதகவல், உறவினர் வருகை. |
| தனுசு | காரிய அலைச்சல், மனஸ்தாபம், ஆரோக்கியக் குறைவு, சுபசெலவு. |
| மகரம் | உறவினர் வருகை, முயற்சி கைகூடும், உற்சாகம், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பிறர் உதவி, காரிய நன்மை, நல்ல செய்தி, தனதானிய சேர்க்கை. |
| மீனம் | பிரயாணம், தந்தைவழி உறவு, ஆரோக்கியக் குறைவு, தனவிரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 150 |
| தக்காளி | 150 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 70 |
| கோவா | 80 | 100 | 110 |
| கரட் | 180 | 180 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 70 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 140 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| கரணைக் கிழங்கு | 60 | 70 | -- |
| பயிற்றங்காய் | 140 | 160 | 160 |
| லீக்ஸ் | 160 | 150 | 170 |
| பீற்றூட் | 100 | 90 | 150 |
| கறிமிளகாய் | 130 | 150 | -- |
| முருங்கைக்காய் | 300 | 350 | 350 |
| போஞ்சி | 110 | 120 | 110 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 40 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 25 |
| தேசிக்காய் | 140 | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 |

## பண்ணிசைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றும் மாணவர்களுக்கான திருநெறிய தமிழிசை மாமணி புதுமுகப்பரீட்சை மிக விரைவில் நடைபெறவுள்ளது.

பண்ணிசைப் பயிற்சி பெறும் மாணவர்கள் வகுப்புக்களில் தவறாது பங்குபற்றி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை பெற்று உடனடியாக மன்றத்தில் ஒப்படைத்து பரீட்ஷசயில் பங்குபற்றுவதனை உறுதி செய்து கொள்ளுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேற்படி வகுப்புக்கள் யாவும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணிவரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் பிற்பகல் 5 மணி முதல் 6.30 மணிவரை யாழ். சிவதொண்டன் நிலையத்திலும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் கடந்த ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். கனகரத்தினம் ம.ம. வித்தியாலய பிரதான மண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக வணிகபீடம்; முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் அதிபர் வே. ஞானகாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (4)

## நூற்றாண்டு விழா கலைநிகழ்வுகள்

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் நூற்றாண்டு விழா கலை நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாட்டிய நாடகம், வாத்திய விருந்து , ஆங்கில இசை நடனம், இன்னிசை கானம் மற்றும் நூற்றாண்டு பாடசாலைகளின் சங்கமம் என்பன இடம் பெறவுள்ளது. (6-4)

## தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நிறுவுநர் நிறைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் எஸ்.வி.டி.காமினி சமரநாயக்க கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,கௌரவ விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொள்ளும் சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தன் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து நினைவுப் பேருரையை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா வழங்கவுள்ளார். (6-4)

## மாபெரும் விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

இன்பர்சிட்டி காண்டீபன் விளையாட்டுக் கழகத்தினர் நடத்தும் 55 ஆம் ஆண்டு மாபெரும் விளையாட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை திறந்த போட்டிகளாக நடைபெறவுள்ளது.

இதில் நீச்சல், கட்டுமரம் வலித்தல், படகோட்டம் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டம் ஆகியனவும் நடைபெறவுள்ளது.

மேலும் மல்யுத்தம், குத்துச்சண்டை, கராத்தே, கபடி, கயிறுஇழுத்தல் (இருபாலரும்) கிறீஸ்கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை, பாரம்தூக்குதல் ஆகிய போட்டிகளும் இடம் பெறவுள்ளது.

இப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் இன்பர் சிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க காரியாலயம் அல்வாய் வடக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என கழகத்தினர் அறிவித்துள்ளனர். (6-4)

## உள்ளூராட்சி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நாடாளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் உள்ளூராட்சி நிகழ்வுகளை எதிர்வரும் ஜீலை மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்துமாறு உள்ளூராட்சி மாகாண சபையினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கான சகல ஒழுங்குகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (4-7)

## இலவச சப்பாத்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யா/புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் பயிலும் 31 மாணவர்களுக்கு இலவசமாக சப்பாத்து வழங்கும் வைபவம் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான நிதி உதவியை இப்பிரதேச கிராம அலுவலர் சோ. பரமநாதன் எடுத்த முயற்சியால் பாடசாலையின் பழைய மாணவனான அ.பத்மநாதன் வழங்கியுள்ளார். (6)

## விவசாயக் கடன் வழங்கல்

(நல்லூர்)

இலங்கை வங்கி கோப்பாய் கிளையினால் வாதரவத்தை விவசாயிகள் சம்மேளன விவசாயிகளுக்கு விவசாயக் கடனாக 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இதில் விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கு தலா ஒரு இலட்சப்படி இக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதாக வாதரவத்தை விவசாய சம்மேளனத் தலைவர் க.சுந்தரவேல் தெரிவித்துள்ளார். (6-134)

## உள்ளூராட்சி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நாடாளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் உள்ளூராட்சி நிகழ்வுகளை எதிர்வரும் ஜீலை மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்துமாறு உள்ளூராட்சி மாகாண சபையினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கான சகல ஒழுங்குகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்த குமார் தெரிவித்துள்ளார். (4-7)

## ஆங்கிலதின போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் இன்று காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டதாக தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஞானசக்தி கணேசநாதன் எழுதிய முன்பள்ளி ஆரம்பக் கல்வியில் அழகியல் நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி பிரதானமண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

வாழ்த்துரையினை யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் வி.சிவசாம யா்ழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (6-3)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை அருள் மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் பகல் 11 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதமவாரிசு கான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ .சிவ. வை. நித்தியானந்தசர்மாவின் *தலையால் நடந்த தலைவி* என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் இடம் பெறவுள்ளது.

அத்துடன் நாளைக்காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (6)




## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட பாடசாலைகளில் தரம் 10 , 11 வகுப்புக்களில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 29 , 30 ஆம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் தேசிய கல்வி நிறுவக செயற்திட்ட அதிகாரி எஸ்.கே. பிரபாகரனால் நடத்தப்படவுள்ளது.

எனவே இச்செயலமர்வில் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (4-7)

## சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் இரண்டாவது குருபூசை வைபவம்

(யாழ்ப்பாணம்)


சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் இரண்டாவது குருபூசை வைபவம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற வுள்ளது. இதனையொட்டி **அன்னை சிவத்தமிழ்ச் செல்வி** மலர் வெளியீடும் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய இரண்டாம் திருமுறை வெளியீடும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதியரசர் பேரறிஞர் க.வி. விக்னேஸ்வரன் நினைவுரை நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருமுறையின் இரண்டாம் திருமுறை நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி திருமதி ஏ.என். கிருஷ்ணவேணி வழங்கவுள்ளார். நூலின் முதற்பிரதியை தொழிலதிபர் ஆ. ஜனார்த்தனன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

மேலும் **அன்னை சிவத்தமிழ்ச் செல்வி** மலர் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக் கழக ஆங்கிலத் துறை விரிவுரையாளர் திருமதி கருணாதேவி சிவாஜி வழங்கவுள்ளார். அத்துடன்நூலின் முதற்பிரதியை இளைப்பாறிய ஆசிரியர் செல்வி கனகம்மா அப்பாக்குட்டி பெற்றுக் கொள்ளவுள்ளார். (6-4)



சுற்றாடல் அமைச்சும் தேசிய கல்வி நிறுவனமும் இணைந்து சுற்றாடல் நாட்காட்டி அறிமுகம் தொடர்பான செயலமர்வு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.குகதாசன் மற்றும் சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் ஆர்.டி.எஸ்.ஜெயசுந்தர ஆகியோர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்கள்,ஆசிரியர்களையும் படங்களில் காணலாம் (படங்கள்:-என்.குமார்)


யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற பொருளியல் பாட கருத்தரங்கில் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள பொருளியலாளர் யோ. ஜயகாந் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் வே. ஞானகாந்தன் நிற்பதையும் வங்கியின் மேற்பார்வைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ச. குறிஞ்சிதரன் கருத்துரை வழங்குவதையும் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# சைவத்துக்கும் தமிழுக்கும் பங்காற்றிய சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்



சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெரும் தொண்டாற்றியவர் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா. அம்மையார் பெரியபுராணத்தில் வருகின்ற காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் வரிசையில் எடுத்தெண்ணப்படுபவர். அம்மையாரின் பணிகள் பற்றியெல்லாம் இன்று சர்வதேச அளவில் பேசப்படுகின்றது. அம்மையார் தெய்வ உலகம் சென்று இன்று இரண்டு ஆண்டுகள் கடந்தோடி விட்டது. அவர்களின் குருபூசை இன்று புதன்கிழமை ஆனிமாதத்து விசாக நட்சத்திரத்தில் நடைபெறுகின்றது.

## இன்று அவரது குருபூசை தினமாகும்

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு ***சிவத்தமிழ்ச்செல்வி*** என்ற பட்டம் சுட்டி நிற்பதுடன் பெரும்புகழையும் தேடித்தந்தது எனலாம். பண்டிதை அம்மையார் அவர்களுக்கு சிவத்தமிழ்ச்செல்வி என்ற பட்டத்தை வழங்கிய பெருமை ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் மணிவாசகர் சபைக்கும் அதன் ஸ்தாபகர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயாவையுமே சார்ந்தது.

சிவத்திரு க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஐயா நம் நாட்டில் நம்முடன் வாழ்ந்து வருகின்ற ஒரு பெரும் மூதறிஞர். சிவத்திரு க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா பண்டிதை அம்மையாருக்கு சிவத்தமிழ்ச்செல்வி பட்டம் வழங்கிய வரலாறு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடத்தி வருகின்ற மணிவாசகர் விழாவிலே 1957 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து ஆண்டுதோறும் சொற்பொழிவு நிகழ்த்தி வரும் பாக்கியம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கே கிடைத்துள்ளது.

பண்டிதை அவர்களுக்குபாராட்டுவிழா எடுத்து அன்னாருக்குப் பட்டமளிக்க வேண்டும் என்று சபையினர் தீர்மானித்தனர். காரைநகர் மக்களும் அவரைக் கௌரவிக்க வேண்டுமென்று சபையினரை வற்புறுத்தி வந்தனர். எனவே 1970ஆம் ஆண்டு சபையினர் ஒன்று கூடி பண்டிதை அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்துவதென்றும் பட்டமளிப்பதென்றும் ஏகமனதாக் முடிவு செய்தனர். இப்பொறுப்பு என்னிடமும் கையளிக்கப்பட்டது.

யான் நாள்தோறும் ஈழத்துச் சிதம்பரத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்த பின்பு ஆலயத்தில் சில நிமிடங்கள் இருப்பது வழக்கம். இவ்விதமாக இருக்கும் போது நான் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு வழங்க வேண்டிய பட்டம் தொடர்பாக இறைவனை வேண்டி நின்றேன். அப்போது என் மனதில் **சிவத்தமிழ்ச்செல்வி** என்ற பெயர் தோன்றியது.

பிறவிக்குருடன் கண் பெற்ற நிலையினை அடைந்தேன். இதை சபையினரிடம் சென்று தெரிவித்தேன். அவர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்து பண்டிதை அவர்களுக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் 19.08.1970 அன்று பாராட்டுவிழாவை மிகச் சிறப்பாக நடத்தி, **சிவத்தமிழ்ச்செல்வி** என்ற பட்டத்தையும் வழங்கினார்.

இறைவனின் அருளால் வழங்கப்பட்ட பெயர் என்ற படியால்தான் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு உள்ள துர்க்கா துரந்தரி, செஞ்சொற்செம்மணி, சித்தாந்த ஞானாகரம், சைவ தர்சினி, திருவாசக் கொண்டல் முதலான மற்றைய பட்டங்களை விட ***சிவத்தமிழ்ச்செல்வி*** என்னும் இப் பட்டம் முன்னிலையில் திகழ்கிறது என்று தெரி வித்துள்ளார்.

மேற்குறித்த சிவ ஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களின் புதையலை அண்மையில் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் பற்றிய தேடலில் கண்ணுற்றேன்.

**கா. சிவபாலன்**

***யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்*** என்னும் நோக்காய் தருகின்றேன். தேடிக்காண முடியாத சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரை யாம் காண முடியாத நிலையில் இருக்கும் போது குருக்கள் ஐயா தந்த புதையலை அம்மையாரின் நினைவு நாளில் சிந்திப்போமாக.






*சாவகச்சேரி - வாரிவனம்*

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான சங்காபிஷேகமும்**
**ஸ்ரீ மகா காளி அம்பாள் கலச பாலாபிஷேகமும்**

விகிர்தி வருடம் ஆனித்திங்கள் 10ம் நாள் (24-06-2010)
வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை

ஸ்ரீ முத்துமாரி அம்மன் அடியார்களே !

தென்மராட்சிப் பகுதியில் சைவமும், தமிழில் வளர்ந்த கந்தபுராண கலாச்சாரமும் மிளிரும் வாரிவனம் பகுதியில் பன்னெடுங்காலமாகப் பக்தியுடன் வேண்டுவோர் வேண்டும் வரங்களை கொடுத்து அருள் பாலித்துக்கொண்டு இருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு விகிர்தி வருடம் ஆனித்திங்கள் 10ம் நாள் 24-06-2010 வியாழக்கிழமை வருட பாலாபிஷேக தின நவோத்தர ஸகஸ்ர 1008 சங்காபிஷேகமும் திரு வீதி உலாவும் ஸ்ரீ மகா காளி அம்பாள் 108 கலச பாலாபிஷேகமும் குருவாரம் அனுஷ நட்சத்திரமும் சாத்திய நாமயோகமும் கூடிய சுபவேளையில் காலை 9.00 தொடக்கம் மதியம் 12.00 மணிவரை நடைபெறும்.

*அடியார்கள் மெய்யன்புடன் திருத்தொண்டு புரிந்து ஆசாரசீலர்களாகக் கலந்துகொண்டு அம்பாளின் திருவருளைப் பெற்று அவள் கடைக்கண் பார்வைக்கு ஆளாவீர்களாக !*

மங்கள வாத்தியமும்
கானலரி கான கலாபூஷணம்
M.T. சத்தியநாதன்
ஒலி ஒளி அமைப்பு கண்ணா சவுன்ஸ் சேவிஸ்
கைதடி மத்தி கைதடி
மகேஷ்வர பூஜையும் நடைபெறும்.

திருப்பணியாளர் "மாரிமைந்தன்"
திரு வைத்தியலிங்கம் சிவராசா
சிவா றேடிங் கம்பனி

உபயம் வை. சிவராசா குடும்பம்

Link Graphics- Tel: 2321485



யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி
நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும்

**அருணகிரிநாத சுவாமி விழா 2010**

இடம் :-சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:- 25.06.2010 வெள்ளிக்கிழமை
நேரம்:-முற்பகல் 10.30 மணி

**சிறப்பு சொற்பொழிவு**
"பேசா அநுபூதி"
**வழங்குபவர்: திரு.ஆ.சிவநாதன்(அதிபர்)**
வல்வை சிவகுரு வித்தியாசாலை

**திருப்புகழிசை**

**வழங்குபவர்கள்:**
வில்லிசைக் கலைஞர் க.சத்தியதாஸ் குழுவினர்
பக்கவாத்திய சகிதம்

**27.06.2010:**
ஞானச்சுடர் 150 ஆவது மலர்
வெளியீடு இடம்பெறும்.
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

பேரவையினர்,
சந்நிதியான் ஆச்சிரமம்.

(1753)

# நவீன எண் ஜோதிடம்

17

ஒற்றை எண்கள் ஆண்தன்மையும் இரட்டை எண்கள் பெண் தன்மையும் கொண்டுள்ளதாக இருக்கின்றது. இருப்பினும் 7 வானத்துக்கும் பூமிக்கும் உள்ள பிரபஞ்சத் தொடர்புகளை அறுத்து எறிவது போன்று வெட்டு வாங்கிய எண்ணாக இருப்பதனால் மேற்பகுதி ஞானத்தையும் கீழ்ப்பகுதி மோகத்தையும் கொடுக்கும் எண்ணாக அமைகின்றது. அந்த 7 என்ற எண் இரண்டையும் சமநிலைப்படுத்திக் கொடுப்பதே இல்லை. அதனால் 7 என்ற எண்ணை "லக்கி செவின்" என்று அழைப்பதும் உண்டு. அது தவறினால் "செவின் போர் கெவின்" என்பார்கள். 7 பெயர்களில் 7 எழுத்துக்கள் இருந்தாலும் இன்றி 4 (13) எழுத்துக்கள் இருந்தாலும் 2 (அதாவது 11) எழுத்துக்கள் இருந்தாலும் 8 எழுத்துக்கள் இருந்தாலும் அவர்கள் இந்த 2, 4, 7, 8 இல் பிறந்து இருந்தால் வளம் இருந்தும் சிறைப்பிழைத்த கைதிகள் போன்ற வாழ்க்கைதனை வாழ வழிகாட்டுமே அன்றி மேம்பட்ட வளமான வாழ்க்கையை உடைத்துவிடும். 7 இறுதியில் ஞானத்தைக் கொடுப்பது வாழ்க்கையில் சுவையைக் கொடுக்காது. 7 எப்போதும் சோதிக்கும் தளபதியாக இருக்கும்.

சுக்கிரன் என்பது வெள்ளி. அது 6 என்ற இலக்கத்தினைக் குறித்து நிற்பது. காமத்தை, போகத்தை, மோகத்தை, ஆசையை, பேர் அவலங்களைக் கூட தடை இல்லாமல் அள்ளிக் கொடுக்கும். உலோக, மோக, போக ஆவல்களைத் தூண்டும் சாரதி வெள்ளியில் பிறந்தாலும்6 எண் தரும் 6, 15, 24 இல் பிறந்தாலும் சுக்கிரனின் ஆதிக்கத்திற்கு ஆளாவார்கள். பிறப்புத் திகதியில் உள்ள எண்களைப் பொறுத்து அதன் ஆக்கங்களும் அதிகாரங்களும் உயர்வு, தாழ்வுகளைக் கொடுக்கும். இருப்பினும் 2000 ஆம் ஆண்டின் தொடக்க காலத்தில் இருந்து இரட்டை எண்ணில் பிறந்தவர்களோ இரட்டை எண்கூட்டித் தரும் தொகையில் இருப்பவர்களோ 2000 ஆம் ஆண்டு காலத்தின் பின் பிறக்கும் எவர்களிற்கும் அவர்களைத் தோற்றுவித்த தலை ஆண்டு தளபதி முதல் 2 ஆக் அமைகின்றது.1999 வரை ஒற்றை எண்ணே 1999 வரை பிறந்தவர்களுக்கு தளபதி எண்ணாக முன் நிற்கின்றது. ஆகவே 2000 ஆம் ஆண்டில் பிறந்தவர்களுக்கும் 2000 ஆம் ஆண்டுக்கு முன் பிறந்தவர்களுக்கும் பல தொடர்பு வித்தியாசங்கள் எண் ஜோதிட வாயிலாக நிறைய உண்டு.

1. சந்திரனின் ஆட்சி ஆண்டாகிய 2000 ஆம் ஆண்டு சந்திரனுடைய தன்மையைப் போன்றது. அது பெண்மை, தாய்மை, தூய்மை இருப்பினும் சந்திரனைப் போல வளர்வும், தேய்வும் இருப்பது போன்று நான்குவித சோதனைகளும் எதிர்நோக்க வேண்டி இருக்கும். சூரிய ஆண்டு 1900 அசைவற்ற சூரியன் அந்த ஆண்டுகளில் பிறந்தவர்களின் வாழ்க்கைப் போக்குகளும் தொழில் அரசியல் வாழ்க்கைக்கும் 2000 ஆம் ஆண்டில் பிறந்தவர்களின் தொழில் அரசியல் வாழ்க்கைகளுக்கும் பல வித்தியாசங்கள் இருக்கும். நிலையான தொழில், நிலையான படிப்பு, நிரந்தரமான வசிப்பிடம், சொந்தமான தாய்மொழி, சொந்தமான கலாசாரம், உடல்நிலை, உணவு வகை, உடை, மனித நாகரீகப் போக்கு அத்தனையுமே உலகெங்கும் நகல் இன்றி அசலைக் காண முடியாது. ஏன் சந்ததி அற்ற வாழ்க்கை என்று ஜாதகங்கள் தீர்ப்புக் கூறினும் விஞ்ஞானத்தின் சீர்கேட்டால் அது திறந்த வழி என்று செயற்கை மூலம் இன விருத்திகளை செய்துவரும் காலம் 2000 ஆம் ஆண்டில் சர்வ சாதாரணமாக வளர்ச்சி பெறும். அதேபோன்று மரணங்கள், துயரங்கள், மனித நேயங்கள், மதிப்புகள், உயர்ந்த பண்புகள் அத்தனையும் கால நேரக் கணிப்பு இன்றி குண்டுகள் போட்டு தகர்த்து அழிப்பது போன்ற சந்தர்ப்பங்களைக் கூட சந்திர ஆண்டு ஆகிய 2000 ஆம் ஆண்டு காலம் சதி செய்து பழி வாங்க பின்நிற்காத தன்மையில் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதி இனிவரும் காலமும் நாசகார வேலைகளை நாள் பார்க்காது செய்யும்.பல உயிரினங்கள் இல்லாது போகும்.

உயிரினங்கள் தன் அசல் பிறப்புகளில் இருந்து அரக்கப்பட்டு கலப்பு இனங்களாக மாறி அசல் பிறப்புகள் அற்றுப்போகச் செய்யும். சுக்கிரன் ஒரு அசுர குரு என்பது இந்து மத ஜாதக, சாஸ்திர கணிப்பு. வான் பரப்பில் பல கிரகங்களில் இருந்தும் சிதறிப் பீச்சி எஞ்சிய மிச்சங்கள் சேர்ந்த குவியலே சுக்கிரனின் சின்னம் ஆகும். இவை சில நட்சத்திரங்களால் காந்த ஈர்ப்பு தொடர்பு இல்லாததாகவும் சில எதிர்ப்பு நட்சத்திரங்களோடு தொடர்பு கொண்டுள்ளதாகவும் தன் ஆதிக்க சக்திதனை அசுரப் போக்காக நடத்தும் தன்மையில் சுக்கிரனுக்கு நிகர் எந்தக் கிரகமும் இல்லை. 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வருமாயின் அன்றைய தினத்தில் மேற்கு உலகம் கதி கலங்கும் தன்மையில் பயங்கரமான நிகழ்வுகளை எதிர்பார்க்கும் மனநோக்குடன் எதிர்பார்த்திருப்பார்கள். ஆக்க அழிவுகளை அள்ளி எறியும் பலசாலியில் நிகர் சுக்கிரனை மீறிய சக்தி வேறு எந்த நட்சத்திரங்களுக்கும் இல்லை. இதனால் புகழ் பெயர் பெற்ற அரச தளபதிகளையும் ஏன் கிறிஸ்தவ சமயத்திற்குரிய யேசுபிரானையும் கூட வெள்ளிக்கிழமை என்ற நாளே வெள்ளி சுக்கிரன் கிரகமே மரணத்தை தீர்ப்பாகக் கொடுத்தது. ஆபிரகாம் லிங்கன், கெனடி, அன்னைதெரேசா , விவேகானந்தர், மகாத்மா காந்தி இவர்கள் அத்தனை பேரையும் வெள்ளி தன் வெண்திரையைப் போட்டு அவரவர் வாழ்க்கையின் முடிவை வரைந்து காட்டியது.

வெள்ளியினுடைய சக்தி போகங்களை , காமங்களை கொடுத்து இறுதியில் மரணத்தை கொடுப்பதற்கு முன்னால் பிரமச்சாரிகளாக்குவதும் உண்டு.அல்லாதுவிடின் அகால மரணத்தைக்கூட கொடுத்துவிடும்.

எண் ஜோதிட நிபுணர்
**பேராசிரியர் ராஜராயேந்திரன்**

துக்கத்திற்கு சனி எந்தநிலை வரினும் சனியே மனிதனின் வாழ்க்கையில் கூறு போட்டு நிற்கின்றது. மங்குசனி, மரணச்சனி, பொங்கு சனி என்கின்றது. 33 1 அல்லது 3இல் தர 100 ஆண்டு இதில் மொத்தம் 100 ஆண்டுகள் நிறை நிற்கின்றது.சனி நீச்சம், சனி உச்சம், சனி பார்வை, கண்டத்துச்சனி மரணச் சனி, பாதச்சனி இப்படி ஜாதகத்தில் 1000 துண்டாக பாவங்களை காட்டி பிளந்து வைப்பது சனியாகும்.இது உடலிலும் உணர்விலும் உணர்ச்சியிலும் உள்ளும் புறமும் எங்கும் ஏகபோகநேரத்தில் மின்னல்வெட்டு வேகத்தில் தன் தொழிலை செய்துமுடித்து விடும் வல்லமை கொண்டது. (தொடரும்)



மின்சக்தி மற்றும் சக்தி வலுத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் யாழ்.பொதுநூலகத்திற்கான நூல்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ்,பாராளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் மின் சக்தி அமைச்சர் மற்றும் பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா உரையாற்றுவதையும் ஜாதிகஹெல உறுமய கட்சியின் தலைவர் சோபித தேரர் மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இணைந்து யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் நூல்கள் வழங்கப்பட்டமைக்கான நினைவுச்சின்னத்தை கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

## மலேசிய ஈழத்தமிழ் அகதிகள் பிரச்சினை

# பான் கீமூனின் பார்வைக்கு கொண்டு செல்வதாக ஐக்கிய நாடுகள் பிரதிநிதி உறுதியளிப்பு

(கொழும்பு)

கோலாலம்பூரில் பத்து தமிழ் அமைப்புகள், மாற்று செயல் அணித்தலைவர் கலைவாணர் தலைமையில் ,பேரணியாக சென்று மலேசிய அரசின் மன்னரின் அந்த ரங்க செயலாளர் டத்தோ துல்கேசியை நேரடியாக சந்தித்து ,ஈழத் தமிழ் அகதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். மலேசியா அரசிடம் வலியுறுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்து வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

மலேசிய நாட்டில் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த 75 ஈழத் தமிழர்களை பிடித்து வந்து,அவர்கள் மீது ஆழ் கடத்தல் மூலமாக மலேசியாவுக்குள் நுழைந்தவர்கள் என்று பொய்யான குற்றச்சாட்டை எழுப்பி ,ஆண்கள், பெண்கள்,குழந்தைகள் எனத் தனித் தனி முகாம்களில் அடைத்துள்ளனர்.

இவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். மலேசிய அரசிடம் அரண்மனையில் இருந்து வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மன்னரின் அந்தரங்க செயலாளரும் இந்தக் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மலேசியாவில் உள்ள ஐ.நா. அலுவலகம் சென்ற இக்குழுவினர், ஐ.நாவிற்கான அதிகாரியான ஜான்ஜு எய்யை நேரில் சந்தித்து ஈழத்தமிழர்கள் 75 பேரும்,57 நாட்களுக்கு முன்பு மலேசிய முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதை ஐ.நா.அலுவலகத்திற்கு தெரிந்தும் ஐ.நா. மன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 57 நாட்களாகவும் சிறுவர்கள் , ஆண்கள் ,பெண்கள் தனித்தனி அறையில் அடைக்கப்பட்டுள்ளது மனித உரிமை மீறல் செயலாகவே தெரிகிறது.

24 மணி நேரத்திற்குள் இவர்களை விடுவிக்க ஐ.நா. மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும் மலேசிய ஆர்டிக்கல் 220இன் படி மனித உரிமை மீறலை ஐ.நா. அவை கண்டித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இந்த கோரிக்கைகளை ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீமூனுக்கு உடனடியாக எடுத்துச்செல்வோம் என்று ஐ.நா.வின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மேலும் அகதிகளுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் செய்வதாக உறுதி அளித்துள்ளார். இந்தப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடாமல் நாளை பாராளுமன்றத்தில் பிரதமர் மற்றும் அங்கு கூடியிருக்கும் உறுப்பினர்களிடம் துரித நடவடிக்கை எடுக்குமாறு நேரில் சந்திக்க உள்ளோம் என்று கலைவாணர் தெரிவித்துள்ளார். (6-4)

## முக்கிய சந்திகளில் பொலிஸாரின் முறைப்பாட்டுப் பெட்டிகள்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலும் பொலிஸாரினால் முறைப்பாட்டுப்பெட்டிகள் முக்கிய சந்திகள் ,பிரபல பாடசாலைகளின் வாசகல்களில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை இப்பெட்டிகளில் இடலாம் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் நடமாடும் சேவை போன்று , முறைப்பாட்டுப்பெட்டி வைக்கப்பட்டுள்ள நடைமுறையும் சிறந்த சேவைகளை வழங்கும் என யாழ். பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6-4)

## போதைப்பொருள் கடத்தியவர் கைது

(கொழும்பு)

தெமட்டகொட பகுதியில் ஹெரோ யின் போதைப் பொருள் கடத்திய சந்தேக நபர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

மேற்படி கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த சந்தேக நபரை தெமட்டகொட எஹலிய கொட எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் கைது செய்த தாகவும் அவரை கைது செய்த போது அவரிடமிருந்து 216 கிரா மிற்கு அதிகமான போதைப் பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தெரி விக்கின்றனர். (6-4)

# இலங்கை வர்த்தகரை ஏமாற்றிய குற்றச் சாட்டில் சென்னை வியாபாரி கைது

(கொழும்பு)

மடி கணனி வழங்குவதாகக் கூறி 15 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டு செங்கட்டி வைத்துள்ள பொதியை இலங்கை வர்த்தகருக்கு கொடுத்து ஏமாற்றிய குற்றச் சாட்டில் தமிழ் நாடு மண்ணடியைச் சேர்ந்த வர்த்தகரொருவரை சென்னை விமான நிலையப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி தெரியவந்துள்ளதாவது ,

மொஹமட் ஹசன், மொஹமட் றபீ , மொஹமட் பௌஸி ஆகியோர் கொழும்பைச் சேர்ந்த வர்த்தகர்கள். இவர்கள் புடைவை மற்றும் பாதணிகள் வியாபாரத்திற்காக அடிக்கடி சென்னைக்கு செல்வது வழக்கமாகும்.

கடந்த வியாழக்கிழமை சென்னை சென்ற இவர்கள் மறுநாள் இலங்கை திரும்பியிருந்தனர்.

இச்சமயத்தில் இவர்கள் மண்ண டியிலுள்ள மொஹமட் ஷாபீர் என்ற வர்த்த கருடன் தொடர்பு கொண்டபோது குறைந்தவிலையிலான மடிக் கணனிகளை தன்னால் வழங்க முடியுமெனவும் அதனை இலங்கையில் அதிக விலையில் விற்கலாம் என்றும் ஷாபீர் ஹசனுக்கு கூறியுள்ளனர். ஹசனிடமிருந்து பின் ஷாபீர் 15 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளனர்.

ஹசன் சென்னை விமான நிலையத்திற்கு வந்தபோது அவருடைய பொதி சோதனையிடப்பட்டது. அதற்குள் சந்தேகமான பொருள் இருந்தது அவதானிக்கப்பட்டது. சோதனையில் கணனிப் பை பொதிக்குள் வெறும் செங்கட்டியொன்றும் இருந்துள்ளது.

தான் செங்கட்டியைக் கொண்டு செல்வது குறித்து ஹசன் அறிந்திருக்கவில்லையென்றும் பொதிக்குள் இருந்தது லப்டப் என அவர் கருதியிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு நாட்களாக விசாரணை இடம் பெற்றபோது மண்ணடி வியாபாரி இலங்கை வர்த்தகரை ஏமாற்றியமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஷாபீர் கடந்த சனிக் கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார். 3 இலங்கை வர்த்தகர்களும் விடுவிக்கப்பட்டு வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஷாபீர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் பாடசாலையை விட்டு விலகிய பின் இலங்கையில் பல வருடம் இருந்து விட்டு பின்னர் சென்னையிலுள்ள மண்ணடிக்கு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்ததோடு அவருக்கு பல மொழிகள் தெரியும் எனவும் பொலிஸார் கூறினார்கள். (6-4)

# இலங்கைப் பணியாளர்களுக்கு மலேசியாவில் தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

மலேசியாவில் தற்போது சுமார் ஒன்பதாயிரம் இலங்கைப் பணியாளர்கள் தொழில்களில் ஈடுபட்டுள்ளதாக மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி டி.டி.ரணசிங்க கூறுகின்றார்.

இவர்கள் சட்டபூர்வமாக மலேசியாவில் தொழில்களில் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலேசியாவில் உள்ள இலங்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாகவும் எதிர்காலத்தில் மேலும் பலருக்கு இங்கு தொழில் வாய்ப்புக் கிடைக்குமென மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளதுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் ஊடாக இலங்கையர்களை மலேசியாவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6-4)

# சத்திர சிகிச்சைக்கு அவசியமான மருந்து வகைகள் இறக்குமதி

(கொழும்பு)

சத்திர சிகிச்சைகளின் போது நோயாளிகளை மயக்கமடையச் செய்யும் ஊசி மருந்து வகைகள் இறக்குமதி செய்யப் பட்டுள்ளது.

இந்த ஊசி மருந்துகள் வைத்திய விநியோகப்பிரிவின் களஞ்சியசாலைக்கு நேற்று முன்தினம் இரவு அனுப்பி வைக்கப்பட்டதாகச் சுகாதார அமைச்சின் வைத்திய விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கமல்ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

6 இலட்சம் சேலைன் போத்தல்கள், 7 இலட்சம் மீள் சக்தி தடுப்பூசிகள் ,புற்று நோய்க்காக வழங்கப்படும் மருந்து வகைகள் , இரப்பைக் கோளாறுகளுக்கான மருந்துகள் என்பவை அண்மையில் கப்பல் மூலம் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக மருத் துவ விநியோகப்பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மருந்து வகைகள் நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள பிரதேசக் களஞ்சிய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

இவற்றை வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதன் மூலம் தற்போது நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப்பொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (6-4)

# செம்மொழி மாநாட்டில் மலையக காமன்கூத்து

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் மலையக பாரம்பரிய கலையான காமன் கூத்து நாளை நடைபெறும் கலாசார நிகழ்வின் போது அரங்கேறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை குழுவில் இடம்பெற்றுள்ள ஹட்டன் தமிழ்ச் சங்கத் தலைவரும் கவிஞருமான சு.முரளிதரன் மேற்கொண்டுள்ளார். இலங்கை குழுவின் தலைவரான பேராசிரியர் கா. சிவத்தம்பியின் வேண்டுகோளின் படி முரளிதரன் இதனை ஏற்பாடு செய்துள்ளார்.

மலையக மக்கள் கலை அரங்க ஏற்பாட்டில் 14 கலைஞர்கள் இடம்பெறுகின்றனர்.

மலையகத்தைச் சேர்ந்த நாடக கலைஞர் இரா.பிரான்ஸிஸ் ஹெலன் நெறியாள்கையில் என் சாம்பசிவன் மூர்த்தி எஸ்.சிறிவேதா பி. விஜயகோபால் எஸ்.பிரேம குமார் எம். தியாகராஜா வி. இராமர் எஸ். போல் பெரேரோ வசந்தி ஹெலன் கிறிஸ் டிலா இராமர் பி.டலாதேவி உட்பட 14 பேர் குழுவில் செல்கின்றனர். (6)

## அலங்கார உற்சவம்

சுன்னாகம் கிழக்கு ஸ்ரீசொர்ணவரத காளி அம்பாள்தேவஸ்தான அலங்கார உற் சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெற வுள்ளது.

இவ்வுற்சவத்தில் தினமும் காலை 10 மணிக்கு பூசை நடைபெற்று மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும்காட்சியும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை 6.30 மணிக்கு திருவூஞ்சலும் அம்பாள் வீதியுலாவும் இடம்பெறவுள்ளது. (6-4)

# 23.06.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- *1532*- இங்கிலாந்தின் 8 ஆம் கென்றியும் பிரான்சின் முதலாம் பிரான்சுவாவும் புனித ரோமப் பேரரசின் 5ஆம் சாள்ஸ் எதிராக இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.
- *1565* -மால்ட்டா மீதான முற்றுகையின் போது ஒட்டோமான் பேரரசின் கடற்படைத்தளபதி கொல்லப்பட்டார்.
- *1658* - இலங்கையின் போர்த்துக்கேயரின் கடைசி பிடியாக இருந்த யாழப்பாணக் கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றினர்
- *1758*- ஏழாண்டுப்போர் : பிரித்தானியப் படைகள் ஜேர்மனியில் கிரெஃபீட் என்ற இடத்தில் பிரெஞ்சுப்படைகள் வென்றன.
- *1760*- ஏழாண்டுப்போர் ஆஸ்திரியா அரசு புரூசியாவை கைப்பற்றியது.
- *1794* - உக்ரேனில் கீவ் நகரில் யூதக்குடியேற்றத்திற்கு ரஷ்யாவின் பேரரசி இரண்டாம் கத்தரின் அனுமதி அளித்தார்.
- *1868*- கிறிஸ்தோப்பர் ஷோல்ஸ் தட்டச்சு இயந்திரத்திற்கான காப்புரிமம் பெற்றார்.
- *1895*- சர்வதேச ஒலிம்பிக் அமைப்பு பாரிசில் அமைக்கப்பட்டது.
- *1919* - எஸ்தோனியாவின் விடுதலைப்போரின் வடக்கு லாத்வியாவில் செசிஸ் என்ற இடத்தில் ஜேர்மனியப்படைகள் தோற்ற இந்த நாள் எத்தோனிய வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- *1942* -இரண்டாம் உலகப் போர் : முதல் முதலாக அவுஷ்விட்ஸ் வதை முாமில் நச்சுவாயு அறையில் சேர்ப்பதற்காக முதல் தொகுதியூதர்கள் பாரிஷில் இருந்து தொடரூந்தில் அனுப்பப்பட்டனர்.
- *1945* - ஜப்பானிய இராணுவத்திற்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஒகினவா சண்டை அமெரிக்காவின் வெற்றியுடன் முடிவடைந்தது.
- *1956*-கமால்நாசர் எகிப்தின் அதிபரானார்.
- *1960* - பத்திரிசு லுமும்பா கொங்கோ குடியரசின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் ஆனார்.
- *1968* -புவெனஸ் அயரசில் உதைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 74 பேர் கொல்லப்பட்டனர்.
- *1980*-இந்திய அரசியல்வாதி சஞ்சய்காந்தி விமான விபத்தில் கொல்லப் பட்டார்.
- *1990* -மல்தாவியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலை அறிவித்தது.

## பிறப்புகள்

- *1924* - ரட்ணசிங்க பிரேமதாஸா இலங்கை ஜனாதிபதி (இ.*1993*)
- *1972*- ஜினடைன் ஜிடான்கால்பந்தாட்ட வீரர்

## இறப்புகள்

- *1980* - வி.வி.கிரி இந்தியாவின் 4ஆவது குடியரசுத் தலைவர் (பி.*1894*)
- *1980* - சஞ்சய் காந்தி இந்திய அரசியல் வாதி (பி.*1946*)

**1985 - இல் இந்நாளில் அயர்லாந்தில் அட்லாண்டிக் கடலின் மேல் 9500 மீற்றர் உயரத்தில் பறந்து கொண்டிருந்த இந்தியாவின் போயிங் விமானத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அதில் பயணம் செய்த 329 பேரும் கொல்லப்பட்டனர்.**





இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஆலோசனையின் கீழ் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் அணியின் ஆதரவுடன் வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயது பிரிவினருக்கான உதைப்பந்தாட்ட இறுதி நிகழ்வில் தேவையாராளி இந்துக்கல்லூரி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிகள் விருந்தினர்களுடன் நிற்பதையும் பயிற்றுவிப்பாளர் எஸ்.[illegible]ாலன் வீரர் ஒருவருக்கு பரிசில்கள் வழங்குவதையும் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் உப- தலைவர் எஸ்.நவநீதமணி வெற்றிபெற்ற வீரர் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-செல்வதீபன்)

# படையினரின் பாதுகாப்புடனேயே முன்னாள் போராளிகள் பணியாற்றுகின்றனர்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் பாதுகாப்பு தரப்பினரின் பாதுகாப்புடனேயே கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இதனால் அனைத்து தரப்பினரது பார்வையிலும் இவர்கள் கைதிகளைப் போன்றே தென்படுகின்றனர் என்று கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ள இந்த முன்னாள் போராளிகளின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு அரசாங்கம் வழிசமைக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பெண் உறுப்பினர்கள் 400 பேருக்கு ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பினை வழங்குமுகமாக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்களுக்கு கொழும்பில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் உணவுடன் கூடிய தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# விடுதலைப்புலிகளுக்கு உதவி அளிப்பது மீதான தடை தொடரும்

## அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பு உட்பட பட்டியல் இடப்பட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவி அளிப்பது மீதான தடை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி உதவிக்கு எதிரான தடைச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

எனினும் மேற்படி சட்டத்தை அமுல் படுத்துவதால் 48 பயங்கரவாத அமைப்புக்கள் தடைசெய்யப்படும் என்பதுடன் அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கி அவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாமல் போகும் என மனித உரிமைகள் அமைப்பு கூறுகின்றது. (4-6)

# கல்வி டிப்ளோமா வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா வகுப்புக்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி நிலையத்தில் நடைபெறு மென யாழ்.மாவட்ட இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய திருமதி த.விஸ்வநாதன் அறியத் தருகிறார். (6-3)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தினை

Botanical Name -Setaria italica
Family - Gramineae
Engl - Italian millet
Sinh- Thanahal

இச்செடி ஓராண்டுக்குரியது. 0.6-1.6 மீற்றர் உயரமானது. இலைகள் நீண்டவை. வேலுருவானவை. 7-10 மில்லி மீற்றர் அகலமானவை. இலை அடி நுனி நீள்வட்ட வடிவான வாயைக்கொண்டிருக்கும். இலைகளில் மென்மையான மயிர்கள் காணப் படும். விதைகள் கொத்தாக காணப் படும். பூந்துணரில் கீழே காணப்படும் நீள்வட்ட வடிவானதாகவும் அழுத்தமான தாகவும் 3/4 மேல் மட்ட பூந்துணரைவிட சிறியதாகவும் 5 நரம்பமைப்பு கொண்ட தாககவும் காணப் படும். மேல் பூந்துணர் நீள் வட்ட குழிவான அழுத்தமற்ற நீளத்தில் மாறுபட்ட நீளங்களைக்கொண்டதாக காணப்படும்.

**பரம்பலும் இன விருத்தியும்**

இது உலர் வலயத்தில் பயிரிடுவதற்கு உகந்த பயிராகும். இப்பயிர்கள் விரைவாக முதிர்ச்சி அடைவதாலும் வரட்சியை தாங்கி வளரக்கூடியதாக இருப்பதாலும் காலபோகத்தில் மழையை நம்பி பயிரிடக்கூடியதாக இருக்கின்றது.

விதைகள் மூலம் இதனை இனவிருத்தி செய்யலாம். திணை விதைத்து 65-70 நாட்களில் அறுவடை செய்ய முடியும்.

**100கிராம் திணையில் உள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு 11.2 கிராம்
சக்தி 331 .கி.கலோரி
புரதம் 12.3 கி
கொழுப்பு 4.3 கி
காபோவைதரேற்று 60.9கி
கல்சியம் 31. மி.கி.
இரும்பு 12.9 மி.கி.
பொஸ்பரஸ் 290 மி.கி
βகரோட்டின் 32 மை.கிராம்
தயமின் 590 மை.கிராம்
ரைபோ பிளேவின் 110 மை.கிராம்
நியாசின் 3.2 மி.கிராம்
நார்ப்பொருள் 8.0கிராம்

**மருந்துவப்பயன்கள்**

தினை அரிசி உடலுக்கு வலிமையைக் கொடுக்கும் வாத நோய்களுக்கு சிறந்த உணவாகும். உடலைப்பாதுகாக்கக்கூடியது. இது தடித்த விதை உறைகளைக்கொண்டது. திணை அரிசியை புழுங்கல் அரிசி அமைப்பது போலவும் அல்லது திணையை நன்கு கழுவி சுத்தம் செய்து உரலில் குத்தி விதை உறை நீக்கி புடைத்து கொழுத்து வெய்யிலில் காய வைத்து அரைக்கும் ஆலையில் கொடுத்து அரிசியாக்கியும் பயன்படுத்தலாம்.

இதனை அன்னமாகவோ அல்லது கஞ்சியாகவோ காய்ச்சி உப்பிட்டுக் குடிக்க வாதரோகிகளுக்கு சிறந்த உணவாக இருப்பதுடன் உடலை மேம்படுத்தக்கூடிய ஒரு




வகையான பாதுகாப்பு உணவாகும்.

வாதரோகிகளுக்கு திணையரிசிக்கஞ்சி
தினை -50 கிராம்
சரக்குத் தூள் -2 தேக்கரண்டி
தோங்காய்ப்பூ 1 மேசைக்கரண்டி
வாத நிவாரணி இலை 5 நெட்டு
எலுமிச்சைப்பழம் -1
உப்பு தேவையான அளவு
உள்ளி 6 பல்லு
சிறிய வெங்காயம் 10
பச்சை மிளகாய் 2

1. முதலில் திணை அரிசியைக் கழுவி கல் , மண் ,உமி முதலியவற்றை அகற்றவும்.

2 நீரைக் கொதிக்க வைத்து திணை அரிசியைத் சேர்த்து வேக விடவும்.

3.சரக்குத்தூள், தேங்காய்ப்பூ, முதலியவற்றை அம்மியில் நன்றாக அரைத்தெடுத்தபின் உள்ளி ,வெங்காயம் சேர்த்து அரைக்கவும்.

4.வாத நிவாரணி இலையை வெந்து வரும் போது சேர்க்கவும். இறக்கி அளவான சூட்டில் அருந்த வாதநோய்கள் கட்டுப்படும்.

நம் நாட்டில் அரிசி சம்பந்தப்பட்ட உணவுகளை அதிகம் சாப்பிடுகின்றோம். அரிசியில் உள்ள காபோவைரேற்றானது உடலின் எடையை அதிகரிக்கச் செய்கிறது. தானிய உணவு வகைகளான குரக்கன் ,சாமை, வரகு, தினை போன்றவற்றையும் நாம் அன்றாட உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்வோமானால் ஆரோக்கியம் நம் கைகளில் தவழும்.

✹ சருமத்தை அழகாகவும் முகத்தை அழகாகவும் வைத்திருப்பதற்கு சிறந்த ஓர் மூலிகை உணவு திணையாகும். அதற்கு திணையை நன்றாக கொழித்து 24 மணி நேரம் நீரில் ஊற விட்டு மறு நாள் வடித்து சுத்தமான வெள்ளைத் துணியில் முடிந்து கட்டித்தூக்கி விடவும். 3,4 நாட்கள் சென்ற பின்பு முளை விட்டிருக்கும் பின்பு முளை விட்ட திணையை ஒரு வாணலியில் இட்டு பொன் வறுவலாக வறுத்து இடித்து அரித்து காற்றுப்புகாத படி அடைத்து வைத்துக்கொள்ளவும்.

தினமும் ஒரு தேக்கரண்டி அளவு இரவில் சாப்பாட்டின் பின்பு தேனில் குளைத்து சாப்பிட்டு வர தோலும் முகமும் அழகாகவும் பிரகாசமாகவும் இருப்பதுடன் உடலின் பலத்தை சுகத்தையும் பேண உதவும்.

✹ திணை அரிசியைக் கொண்டு கூழ்

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

தயார் பண்ணி பால் ஊட்டும் தாய்மாருக்கு கொடுக்க உடல் பலத்தை அதிகரிக்கச் செய்யும். சிறுநீரை நன்கு வெளியேற்றச் செய்யும் தன்மையும் உண்டு.

✹ தேவையான திணையை மாவாக்கி (மேற்கூறியது போல) ஒரு வாணலியில் இட்டு சிறிது நல்லெண்ணை விட்டு காய்ந்ததும் அதில் முன் சுத்தப்படுத்திய திணை மாவை சிறிது தண்ணீர் விட்டு கரைத்து வாணலியில் கழி போலக் கிளறி சிறிது சீனியும் சேர்த்து இறக்கி தினமும் ஒரு வேளை காலையில் மட்டும் சாப்பிட்டு வர நாளடைவில் தேக புஷ்டி உண்டாகி உடலிற்கு பலத்தைக்கொடுக்கும். வளரும் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான, பாதுகாப்பான உணவு என்பது குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை - 2010

# பொருளியல்

## பல்தேர்வு வினாக்கள்

By :- S.S.சிறி B.Com (Spl)

### பகுதி - II - I

1. கீழே காட்டப்பட்ட வங்கிகளில் உத்தரவுப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகள் சில அடங்கிய தொடராக கருத கூடியதை இனங்காண்க.

   i) இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, எம்.சீ.பீ. பாங்க்லிமிடெட், டீ.எவ்.சீசீ அபிவிருத்தி வங்கி, இந்தியன் வங்கி, இலங்கை வங்கி.

   ii) நேசனல் றஸ்ட் பாங்க் லிமிடெட், பப்லிக் பாங்க்பர்காட், பான் ஏஸியா பாங்கிங் கோப்பறேசன் லிமிடெட், மக்கள் வங்கி, வயம்ப அபிவிருத்தி வங்கி.

   iii) இந்தியன் ஓவசீஸ் வங்கி, இந்தியன் வங்கி, எம்.சீ.பீ.பாங்க் லிமிடெட், கொமர்சியல் வாங்க் ஒவ்சிலோன் லிமிடெட், வயம்ப அபிவிருத்தி வங்கி.

   iv) ஊவா அபிவிருத்தி வங்கி, எஸ்.எம்.ஈ பாங்க் லிமிடெட், தேசிய சேமிப்பு வங்கி, கந்துறட்ட அபிவிருத்தி வங்கி, டீ.எவ்.சீ.சீ வங்கி

   v) ஆர்பிக்கோ பினான்ஸ் கம்பனி லிமிடெட், அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட், இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட், எதிரிசிங்க றஸ்ட் இன்வெஸ் மென்ட் லிமிடெட், எஸ்பீ பினான்ஸ் லிமிடெட்.

2. கீழ்வரும் கூற்றுக்களில் தவறானதாக அடையாளப்படுத்தப்படுவது யாது?

   i) முதலீட்டு கேள்வி நெகிழ்ச்சி வாய்ந்ததாக காணப்படும் போது வட்டிவீத வீழ்ச்சி முதலீட்டு கேள்வி. நெகிழ்ச்சி அற்றதுடன் ஒப்பிடும் போது பொருளாதார வளர்ச்சியை பெரியளவால் அதிகரிக்கப்படும்.

   ii) வட்டி வீதத்திலான அதிகரிப்பு ஊகநோக்க கேள்வியை குறைக்கும்.

   iii) முறிகளின் விலை வீழ்ச்சியடையும் போது நபர்கள் கைகளில் வைத்திருக்கும் பணத்தின் அளவு குறைவடையும்.

   iv) வட்டி வீதத்திற்கும் முறிகளின் விலைக்கும் இடையில் நேரான தொடர்பு நிலவும்.

   v) மத்திய வங்கி மிகைத்திரவத்தன்மையை உறிஞ்சுவதற்காக மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்தும்

3. பின்வருவன தொடர்பாக சரியான கருத்தாக உணர்த்தப்படுவது யாது?

   i) தேசிய சேமிப்பு வங்கி கடனாக்கத்தை செய்யும்.

   ii) வணிக வங்கி புதிய பணத்தை வெளியிடும்.

   iii) தேசிய சேமிப்பு வங்கி கடன் வழங்கும்.

   iv) மத்திய வங்கி வைப்பின் மூலம் கடனாக்கும்.

   v) இவை அனைத்தும் பொய்யானவை.

4. வங்கித் தொழில் தொடர்பாக வணிக வங்கிகளின் வாடிக்கையாளர்களின் முதல்தர வைப்புக்கள், வழிவந்த வைப்புக்கள் என கருதப்படுபவை முறையே

   i) போலிப்பணத்தை சட்டப்பணமாக்குதலும், சட்டப்பணத்தை வங்கிப் பணமாக்குதலும்

   ii) நடைமுறை வைப்புக்களும் நிலையான வைப்புக்களும்

   iii) வாடிக்கையாளர்கள் சட்டப்பணத்தை கேள்வி வைப்பாக்குதலும் வணிக வங்கி கடன் வழங்கல் மூலம் வைப்புக்களாக்குதலும்

   iv) வாடிக்கையாளர்கள் தாள் உலோக நாணயங்களை நிலையான வைப்பாக்குவதும் வணிக வங்கிகள் அவற்றை இன்னொரு வங்கியில் வைப்பாக்குதலும்.

   v) வாடிக்கையாளர்களின் நிலையான வைப்புக்களும் மத்திய வங்கியில் உள்ள வணிக வங்கியின் வைப்புக்களும்.

5. வணிகவங்கி முறைமையின் ஆரம்பநடப்பு வைப்பு 100 மில்லியன் ரூபா ஆகவும் இதில் 20% சட்டநியதி ஒதுக்குகளாகவும் உள்ளது. மத்திய வங்கி ஒதுக்கு வீதத்தை 25% மாக மாற்றுதல் அல்லது 20 மில்லியன் ரூபா பெறுமதியான உண்டியல்களை வங்கி வாடிக்கையாளருக்கு விற்பதாகவும் கருதுக. இது தொடர்பான விளைவுகள் தொடர்பாக சரியானது.

   i) உண்டியல் செயற்பாடு ஒதுக்கு வீத மாற்றத்தைவிட உயர்வாக பணநிரம்பலில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

   ii) இரண்டு செயற்பாடும் தொடர்பாக பணநிரம்பல் ஒரே மாதிரியாக அமையும்.

   iii) இரண்டு செயற்பாடு தொடர்பாக எவ்வித மாற்றமும் நிகழாது.

   iv) i, iii சரியானவை

   v) யாவும் தவறு

6. குறித்தாண்டில் பணவீக்க வீதம் -2% மாகவும் வேலையின்மை வீதம் 10% ஆகவும் பண வட்டி வீதம் 12.5% மாகவும் உள்ளதெனக் கொள்க. இங்கு மெய்வட்டி வீதம் தொடர்பாக சரியதானதை தெரிக.

   i) 11.5% ii) 13.5% iii) 14.5%

   iv) 9% v) 3.5%

7. பணப்பெருக்கி 5 ஆகவும், அடிப்படை நாணயம் 500 மில்லியனாகவும் உள்ள போது $M_2b$ பணநிரம்பல் எவ்வளவாக அமையும்.

   i) 2500 ii) 100 iii) 2000

   iv) 1500 v) 200

8. உணவுப் பொருட்கள், மற்றும் எரிபொருட்களின் விலைகள் அகற்றப்பட்டு பணவீக்க அளவு மதிப்பிடப்படுதல் தொடர்பாக எவ்வாறு கருதலாம்.

   i) தவழும் பணவீக்கம் ii). வெளித் தெரியும் பணவீக்கம்

   iii) மையப் பணவீக்கம் iv) உச்சவேக பணவீக்கம்

   v) கேள்விப் பக்க பணவீக்கம்

9. பின்வரும் எச்செயற்பாடு செலவுத்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணியாக இனங்காட்டலாம்.

   i) சென்மதி நிலுவை மிகைநிலை ஏற்படுதல்.

   ii) பொதுத்துறைகளிடம் கடன் பெறுதல்

   iii) தொழிற்சங்க செயற்பாட்டால் சம்பளம் அதிகரித்தல்.

   iv) நுகர்வு செலவுகளின் அதிகரிப்பு நிகழ்தல்

   v) முதலீட்டு செலவுகள் அதிகரித்தல்.

10.வர்த்தகத் திருப்பம் என்பது தொடர்பாக சரியாக தெரியக் கூடியது யாது?

i) இலங்கை தனது வர்த்தகச் செயற்பாடுகளை மாற்றியமைத்தல்

ii) இரு பக்க உடன்படிக்கை அடிப்படையில் வர்த்தக செயற்பாடுகள் இடம் பெறுதல்.

iii) வர்த்தகத்தின் மிதான தடைகளை அங்கத்துவ நாடுகளுக்கிடையே அவற்றிலும் சிறப்புத் தேர்ச்சியை அடையாளம் காணும் அத்துடன் உலக உற்பத்தித் திறன் முன்னரை விட அதிகரித்து அந்நிய செலவணி வருவாயை அதிகரித்தல்

iv) உறுப்புநாடு ஒன்றில் இருந்து குறைந்த செலவில் வாங்கக் கூடிய பண்டங்களை உறுப்புரிமை / அங்கத்துவமில்லா நாடொன்றிடம் இருந்து கூடிய செலவில் இறக்குமதி செய்ய வேண்டி இருத்தல்.

v) யாவும் தவறானவை

11. சம அளவு உள்ளீடுகள் மூலமான வெளியீடுகள் வருமாறு.

| A | | B | |
|---|---|---|---|
| கணினி | கார் | கார் | கணினி |
| 48 | 0 | 0 | 32 |
| 0 | 24 | 8 | 0 |

காட்டப்பட்ட அட்டவணையானது சர்வதேச வர்த்தகம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு செலாவணி வீதம் தொடர்பாக சரியாக அமைவது

i) A நாடு 2 கணனியை கொடுத்து 4 காரைவிட கூடவும் 6 காரை விட குறையவும் பெறமுடியும்.

ii) A நாடு 1 காரை கொடுத்து 2 கணனியைவிட கூடவும் 4 கணனியை விட குறைவாகவும் பெறமுடியும்.

iii) B நாடு 1 காரை கொடுத்து 2 கணனியை விட கூடவும் 4 கணனியை விட குறைவாகவும் பெறமுடியும்.

iv) ii, iii சரியானவை.

v) யாவும் தவறானவை.

12.1$ = 100/= எனக் கொள்க 40% ஆல் நாணய பெறுமதி இறக்கம் இடம்பெற்றால் புதிய 1 ரூபாவின் பெறுமதி யாதாக அமையும்.

i) 0.008$ ii) 0.006$ iii) 0.002$ iv) 0.003$ v) 0.01$

13.கடன்மீள் பேச்சுவார்த்தை மீளமைத்தல் (Debt Re Schedules) என்பதன் கருத்தை தெரிக?

i) கடன்களுடன், வட்டியை சேர்த்து செலுத்துதல்

ii) இறுக்கமான நிபந்தனையில் கடன்பெறுதல்

iii) கடன்களுக்கான மீள்கொடுப்பனவு, வட்டிக் கொடுப்பனவுகளை மிகக் குறுகிய காலத்தில் செலுத்துதல் வேண்டும்.

iv) கடன்தொகைகளை மறு பரிசீலனை செய்யும்படி கோரல்

v) வழங்கிய கடன் நிபந்தனை, வட்டி, மீள் செலுத்தல் நிபந்தனைகளை மாற்றி அமைத்தல்.

14. பெறுமான ஒப்பீடு / ஒப்பீட்டு பெறுமானம் (Comparative Value Price) என்பதற்கான கருத்தை தெரிக?

i) சர்வதேச வர்த்தகத்தில் நாடுகள் உற்பத்தி, வர்த்தகம் ஆகிய பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அடிப்படையாக டேவிட் றிக்காடோ என்பவரால் விளக்கப்பட்ட கோட்பாடு ஆகும்.

ii) கல்வித்கமை, கடின வேலைக்கேற்றவாறு தொழில் அனுபவத்தை பொறுத்து வேறுபட்ட தொழிலுக்கு ஏற்ப கூலி வேறுபடுவதை கருதும்.

iii) இருபொருள் உற்பத்தி தொடர்பாக குறிப்பிட்ட நாடு மற்றைய நாட்டைவிட குறித்த பொருளில் அதிக வெளியீட்டை பெறுதல்.

iv) குறிப்பிட்ட உற்பத்தியில் அளவுத்திட்ட சிக்கனங்கள் நிலவுதல்.

v) யாவும் தவறு.

15.குறிப்பிட்ட பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனுக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட வேண்டிய ஊழியத்தின் அளவைவிட பொருளாதாரத்தில் மேலதிகமாக ஊழியத்தினை ஈடுபடுத்துதல். இதனால் தோற்றம் பெறும் வேலையின்மை எவ்வாறாக கருதலாம்?

i) தன்னார்வ வேலையின்மை

ii) உராய்வு வேலையின்மை

iii) பருவகால வேலையின்மை

iv) கட்டமைப்பு ரீதியான வேலையின்மை

v) மறைமுக வேலையின்மை

16.அரசாங்கம் கர்ப்பிணித்தாய்மார், குழந்தைகளுக்கான இலவச உணவுத்திட்டம் இலவசக்கல்வி, மானியங்களை, பெருமளவு வழங்குவதன் மூலமான அரசின் முக்கிய தேவைப்பாடாக கருதப்படாதது யாது?

i) தாய்மார் இறப்பு வீதத்தை குறைத்தல்

ii) சிசுமரண வீதத்தை குறைத்தல்

iii) சமூக நலனை உச்சக்கட்டத்திற்கு கொண்டு வருதல்

iv) பாதீட்டு பற்றாக்குறைக்கு முகங்கொடுத்தல்

v) அபிவிருத்தியை எய்துவதற்கு சமூகக் குறிகாட்டிகளை நிறைவேற்றல்.

17.லோறன்ஸ் வளையியானது சமவருமானப் பரம்பல் கோட்டைவிட்டு விலத்தி நகருகின்றது இது தொடர்பாக உண்மைத்தன்மையை வெளிப்படுத்துவது யாது?

i) வருமான சமமின்மை அதிகரித்து செல்கின்ற நிலையாகும்.

ii) வருமான சமமின்மை குறைந்து செல்கின்ற நிலையாகும்.

iii) வருமான சமமின்மை எதுவும் ஏற்படவில்லை என்பதாகும்.

iv) வருமான சமமின்மை உச்சநிலையை அடைந்துள்ளது.

v) ஏழைகள் பெறும் வருமானப் பங்கு அதிகரித்து சென்றுள்ளது.

18.குறித்த ஆண்டு கற்பித தகவல்களின் அடிப்படையில் இயற்கை சனத்தொகை வளர்ச்சி வீதம் -1.7% காட்டிய போது சனத்தொகை வளர்ச்சி வீதம் 1.1% ஐ காட்டியது இது தொடர்பாக சரியானது யாது?

i) குடிவரவு வீதம் -0.6% மாக உள்ளது.

ii) தேறிய குடிப்பெயர்வு வீதம் -0.6% மாக உள்ளது.

iii) குடி அகல்வு வீதம் -0.6% மாக உள்ளது.

iv) தேறிய குடிப்பெயர்வு வீதம் 0.6% மாக உள்ளது.

v) பிறப்பு வீதம் 0.5% மாக உள்ளது.

19.முறைமைசாராப் பொருளாதாரம் ஒன்றின் சரியான பண்பாக கூறக்கூடியது யாது?

i) அரசின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்படல்.

ii) அரசின் சட்டத்திட்டங்களை ஏற்றுக்கொள்ளல்

iii) வரி செலுத்துவதை விரும்புவார்கள்

iv) சமூகபாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பங்களிப்பதில்லை

v) பகிரங்கமாக அரசின் பதிவின் கீழ் உத்தியோகபூர்வமாக உருவாக்கப்படுபவை.

20. 2008, 2009 பணவீக்க வீதங்கள் முறையே எவ்வாறு அமையும்.

i) 22.6%, 101%

ii) 22.6%, 5.4%

iii) 10%, 22.6%

iv) 22.6%, 3.4%

v) 5%, 3.6%

# கனடாவில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட இலங்கையர் நாடு கடத்தப்பட்டுள்ளார்

கனடாவில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜோதிரவி சிற்றம்பலம் என்ற நபரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த நபர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் பல்வேறு குழுச் சண்டைகளுக்கு காரணமாக இருந்தார் எனவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

கனேடிய நீதிமன்றம் கடந்த 10 ஆம் திகதி குறித்த நபரை நாடு கடத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும் நேற்றுமுன்தினமே இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வன் முறைக் கும்பல் ஒன்றை குறித்த நபர் உருவாக்கியுள்ளதாகவும் இக் குழுவினரினால் மேற்கொள்ளப்பட்ட கோஷ்டி மோதல்களில் குறைந் தபட்சம் மூன்று பேர் கொல்லப்பட்டி ருக்கலாம் எனக் குறிப்பிடப்ப டுகிறது.

குறித்த நபர் ஆறு ஆண்டுகள்ாக போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(6-4)

# சொந்தமாக கணித தேற்றத்தை உருவாக்கி 7 வயது சிறுவன் சாதனை

பண்டைய கிரேக்க கணித மேதையான பைதகரஸ் போன்று ஒஸ்கார் செல்பி என்ற 7 வயது பிரித்தானியச் சிறுவன் தனது சொந்த முயற்சியில் கணித தேற்றமொன்றை உருவாக்கி சாதனை படைத்துள்ளான்.

ஜி.சி.எஸ்.ஈ.கணித பரீட்சைக்கு தோற்றி சித்தியெய்திய ஒஸ்கார் செல்பி இளம் கல்வியியல் நிபுணர்கள் உருவாக்கிய ரைட் கற்பித்தல் சேவை கல்வி நிறுவகத்தின் மாணவராவார்.

மேற்படி கல்வி நிறுவனம் மாலை நேரங்களிலும் வார இறுதியிலும் மட்டுமே செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கல்வயல் டேனிஜா மழலைகள் கல்விப்பூங்கா இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்வயல் பொது நோக்கு மண்டப மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (6-31)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அருட்பணி எஸ்.ஜே.இராஜநாயகம் எழுதிய வளமாகும் குடும்ப வாழ்வு நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். சென் பற்றிக்ஸ் வீதியலமைந்துள்ள அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி பேனாட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (6-3)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு காளியானை , தில்லாலம்புலம் ஞான வைரவர் ஆலய நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.24 மணிமுதல் 7.18 மணி வரையுள்ள சுப முகூர்த்த சுப வேளையில் நடைபெறவுள்ளது. (4-6)

# வெளிநாட்டு நாணயங்கள் அடங்கிய கொள்கலன்கள் முல்லைத்தீவில் புதைப்பு?

(கொழும்பு)

வெளிநாட்டு நாணயத்தாள்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் முல்லைத்தீவு பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளதென பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கொள்கலன்கள் புதைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் கண்டறிவதற்காக பாரிய தேடுதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் உளவாளிகள் சிலர் இந்த தகவலை வெளியிட்டிருப்பதாகவும் வெளிநாட்டு நாணயங்கள் அடங்கிய கொள்கலன் பெட்டிகளைப் புதைக்கும் பணிகளில் ஈடுபட்ட சில விடுதலைப் புலி உறுப்பினர்கள் இறுதிக் கட்டப் போரின் போது அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருப்பதாகவும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ளார்.

இந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை அடையாளம் கண்டு அவர்கள் மூலமாக கொள்கலன் பெட்டிகள் புதைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(6-4)

# சமையல் எரிவாயு விலைகளை மீளாய்வு செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

சமையல் எரிவாயுக்களின் விலைகளை மீண்டும் ஒருமுறை மீளாய்வு செய்யுமாறு கோரி எரிவாயு நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன.

இருமாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் விலைமீளாய்வுக்கு அமைவாக எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் சமையல் எரிவாயுக்களின் விலைகளில் சீராக்கங்கள் இடம்பெறவுள்ளன. இதன் படி கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் உலக சந்தையில் நில விய சமையல் எரிவாயுக்களின் மீதான விலைகள் கவனத்தில் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

எவ்வாறாயினும் கடந்த இரு மாதங்களில் உலக சந்தையில் சமையல் எரிவாயுக்களின் விலைகள் வீழ்ச்சியடைந்திருந்ததாக நுகர்வோர் அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த முறை விலை மீளாய்வின்போது இலங்கையிலும் விலைகள் குறைவடைய வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த மே மாதத்தின் ஆரம்ப பகுதியி லேயே இறுதியாக விலை மீளாய்வுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

இதன் போது ஷெல் எரிவாயுவின் விலை 219 ரூபாவா லும் லாவ் எரிவ்வாயுவின் விலை 323 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது ஷெல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 1769 ரூபாவாகவும் லாவ் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 1744 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(6-4)




தென்னிந்தியாவில் புகழ் பெற்ற வயலின் இசைக் கலைஞர் களான அக்கரை சுபலட்சுமி, சொர்ணலதா சகோதரிகளின் வயலின் இசை அரங்கு அண்மையில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வைப் படத்தில் காணலாம்.

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று பன்னிரண்டாம் திருவிழா

### நானிலம் போற்றும் நல்வாழ்வு வேண்டும்

நீலக் கடலலை தாலாட்ட
நித்தமும் அடியவர் புகழ் பாட
பொன் எழில் சூழ் திரு நயினையினை
பொற்புடை அழகுடன் ஆள்பவளே– நாம்
எண்ணிய எண்ணங்கள் மிக ஈடேற வேண்டும்
எண்ணித் துணிந்தெமைக் காத்திடல் வேண்டும்.
நானிலம் போற்றும் நல்வாழ்வு வேண்டும்
நாடி உனைச் சரண் புகுந்தோம்
நாயகியே அருள் புரிவாய்.

இணுவை சுகந்தி.

### வல்லமைதாராய் வலம்புரி நாயகியே!

அகிலமெல்லாம் ஆட்சி
செய்கின்ற அற்புத நாயகியே!
அலை கடல் நடுவே வீற்றிருந்து
அருள் பாலிக்கும்
சிவகாம சுந்தரியே!
படகேறி உன்வாசல்
வலம் வரும் அடியாரின்
குறையாவும் போக்கிட
வரம் வேண்டித் துதிக்கின்றோம்.
வல்லமைகள் தந்து
காத்திடுவாய் வலம்புரி நாயகியே!

செ. ரவிசாந் , குப்பிளான்

### உன் கருணை வேண்டுமம்மா

நாகமதில் குடியிருந்து
நாடாளும் தாயே
நாடிவரும் பக்தர் குறை
நாள்தோறும் தீர்த்து வைப்பாய்
உன்கருணை வேண்டும் அம்மா
உலகமக்கள் வாழ்ந்திடவே
உன்கரமதனை நீட்டி நீயும்
உலகத்தை தாங்கிடுவாய்

த.தயாநிசன்
பாழ்/மத்திய கல்லூரி.

### ஸ்ரீ நயினை நவ நாயகியே

ஸ்ரீ நயினை நவ நாயகியே! மீனாட்சியே – ஈழத்தின்
வடபால் சைவம் பௌத்தம் சமரச பூரணியே நீ
யாழவளே எம் வாழ்வை வளமாக்கும் உத்தமியே
நிலையான எம் வாழ்விற்கு வல்லமையைத் தந்திடுவாய்


ஏழுகடல் நடுவே பல்லாண்டு அருள்புரியும் சோதரியே
ஏழைகளுக்கும் அருள் புரியும் பூரணியே – அம்மா
குழந்தைச் செல்வம் கொடுப்பவளே சுமங்கலியே
குங்குமம் மஞ்சளும் காத்தருளும் காமாட்சியே.

க.கனகராசா
தோப்பு

தட்ஷா
அழகுக்கலையகமும்
பயிற்சி நிலையமும்
இல.84, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 9713,
0774030909, 077 3383643

# வன்னி மக்களின் பிரச்சினையைத் தீர்த்த பின் அரசியல் பிரச்சினை குறித்துப் பேசுங்கள்

## யாழ். வந்த சோமவன்ச வலம்புரிக்கு விசேட செவ்வி



வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் உடனடியாக தீர்த்து வைக்கப்படவேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் வாழும் போதுதான் அவர்கள் சுயமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அப்போது தான் அவர்களிடம் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பேச முடியும் எனஜே.வி.பியின்தலைவர்சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் வலம்புரிக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே இதனைத் தெரிவித் தார்.

அவர் தனது செவ்வியில் மேலும் கூறியதாவது,

**தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு ஜே.வி.பி. மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?**

யுத்தம் முடிவடைந்து 13 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் ஜே.வி.பி ஆராய்ந்து வருகின்றது.

அதன் பிரதான பிரச்சினையாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதில் ஜே.வி.பி. கரிசனை கொண்டுள்ளது.

நாம் வன்னியில் உள்ள மக்களைச் சந்தித்த போது அவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் கண்ணீர் மல்க கதறியழுகின்றனர் இது எமக்கு கவலை அளிக்கிறது.

நாமும் மனிதர்களே. அந்த வகையில் வன்னி மக்களின் துயரம் எம்மையும் கவலை அடையவைக்கின்றது.

தற்போது வன்னி மக்களின் நிலைமைகள் கடந்த 13 மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலையிலே காணப்படுகின்றது. கணவன் ,மனைவி,பெற்றோர் ,பிள்ளைகள் என பலரும் பலவகையான பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளை மேற்கொண்டுள்ளதாக அரசு கூறுகின்றது. ஆனால் அவர்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் அரசு கூறும் புள்ளி விபரங்களைக் கூட உண்மையானதா என நம்ப முடியாத நிலை காணப்படுகின்றது.

அதைவிட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்கள் அடங்கிய தகவல்கள் கூட அரசாங்கத்திடம் இல்லை. இவை கூட இல்லாத நிலையில் எவ்வாறான உதவிகள் அவர்களைச் சென்றடைகின்றன என்ற சந்தேகம் எழுகின்றது.

பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர் ,யுவதிகள் காணாமல் போயுள்ளனர். 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர்.

இவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அதன் மூலம் அவர்களது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் 13மாதங்களுக்கு முன்னர் நாம் பெற்ற வெற்றி என கூறிக்கொள்ளும் நிகழ்வை மாற்றமடையச் செய்யும் பாரிய எதிர் விளைவுகளை ஏற்படு த்தி விடும்.

### அரசின் மீள் குடியேற்றம்

எட்டுத்த கரங்களைக் கொடுத்து மக்களை வெயிலிலும் மழையிலும் வாட வைத்து விட்டு அரசு அதனை மீள்குடியேற்றம் எனக் கூறுகின்றது. குறைந்த பட்சம் மனிதன் வாழக்கூடிய அடிப்படைப் பிரச்சினையான வாழ்விடப்பிரச்சி னையைக் கூட, வாழக் கூடிய சூழலைக்கூட அரசு எடுக்கவில்லை என்பதை நாங்கள் நேரடியாகக் கண்டு கொண் டோம். இவ்வாறான சூழ்நிலையில் அந்த மக்களிடம் அரசியல்பிரச்சினைகளைக் கொண்டு செல்வது எந்த வகையில் நியாயமாகும். இதனைக் கருத்தில் கொண்டு அவர்களின் முதன்மை பிரச்சினை களை தீர்த்து வைக்க வேண்டும் என ஜே.வி. பி கோருகிறது.

### அரசியல் நிலைப்பாடு

பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் உட்னடியாகத் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். அவர்க்ள் சுதந்திரமாக வாழ வழி ஏற்படுத்த வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் அவர்கள் வாழும் போது தான் அவர்கள் சுயமாக, சிந்திக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். அப்போதே அவர்களிடம் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பேச முடியும்.

### 13 மாதங்களுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கான ஜே.வி.பியின் செயற்பாடு

பிரச்சினைகளுக்கு எப்போதும் தனி நபராலேயோ அல்லது தனி அரசாலேயோ தீர்வு காண முடியாது. இந்நிலையில் இன,மத,குல பேதமின்றி பொதுவான நடவடிக்கைகள் தேவை.

அவ்வாறான சூழல்,தலைமைத்துவம் எதுவும் காணப்படவில்லை. இதன் காரணமாக ஜே.வி.பி. 14 அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து தீர்க்கமான முடிவு ஒன்றை மேற்கொள்ளுமாறு அரசைக் கோரியிருந்தது. அதில் சகல மக்களும் ஒன்றிணைந்து செய்ய வேண்டிய வேலைகள் தொடர்பில் கூறியிருந்தோம். அதில் முதல் கோரிக்கையாக அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய ஒரு திட்டத்தை வலியுறுத்தியிருந்தோம். அந்த வகையில் நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்காகவும் ஜே.வி.பி. செயற்பட்டது.

சுனாமியின் போதுகூட நாம் அனைத்து மக்களுக்கும் உதவிகளை மேற்கொண்டிருந்தோம். சில பகுதிகளுக்குச் சென்று அப்பகுதி மக்களை நேரடியாக சந்திப்பதற்கான சூழலை அரசு அப்போது உருவாக்கித் தர வில்லை. ஆனால் இன்றும் கூட சில கட்டுப்பாடுகள் ,தடைகள்,அடக்கு முறைகள் என்பன காணப்படுகின்றன. அன்று ஆரம்பித்த நிலைமையே இன்றும் காணப்படுகின்றது. இதனால் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய அனைத்துக் கட்சிகளையும் சமூகத்தையும் ஒன்றிணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனையே ஜே.வி.பி வலியுறுத்தி வந்தது, வருகின்றது.


### அன்று ஆதரவு இன்று கண்டனம்

**அரசாங்கத்துடன் இணைந்திருந்த போது தமிழ் இளைஞர் ,யுவதிகளின் கைது, கடத்தல் என்பன குறித்து பேசாத ஜே.வி.பி இன்று தமிழ் இளை ஞர் ,யுவதிகளின் கைது , கடத்தல் குறித்து கரிசனை கொள்கின்றதே?.**

நாட்டின் ஜனநாயகம் அழிவடைந்து கொண்டிருந்த போது ஜே.வி.பி. அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கியது. அதற்கு ஆதரவு வழங்கியிருக்காவிட்டால் இன்று நாடு பல்வேறு வழிகளில் பிளவுபட்டிருக்கும். அதற்காக அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவு வழங்குதல் என்பது அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிப்பது என்பது பொருளாகாது.

**தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுமாறு ஜே.வி.பி அன்று அரசை வலியுறுத்தாதது ஏன்?**

கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணி சரியான கொள்கைகளை முன் வைத்தது.



தமிழ்,சிங்கள மொழிகள் அரச மொழிகளாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தது. ஜனநாயகம் முன் வைக்கப்படவேண்டும் என வலியுறுத்துகிறது. நாட்டின் அடிப்படைச் சட்டத்தில் பாகுபாடுகள் இழைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல கோரிக்கைகளை முன்வைத்து ஜே.வி.பி தெரிவித்த கருத்துக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமல் லாது சகல அரசியல் கட்சிகளும் எதிர்த்தன.

ஆனால் ஜே.வி.பி அனைத்து மக்களையும் சம கண்ணோட்டத்துடனேயே பார்த்தது. எவரும் எங்கும் வாழலாம் என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியது.ஆனால் ஜே.வி.பி.யின் எந்தக் கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் வேறு கட்சிகள் முன் வைத்த கோரிக்கைகள் இரு நாட்டு மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவையாக இருக்கவில்லை.இன்று நாங்கள் பேசாது இருந்தாலும் கூட இன்று தமிழ் மக்கள் பாரிய பிரச்சினை களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். இந்த பிரச்சினைகள் தொடர்ந்து ஏற்படக்கூடாது.

ஆனால் இன்று அரசியல் கட்சிகள் தங்களின் பிரச்சினைகளை மக்களின் பிரச்சினையாக கூறி வருகின்றன. மக்கள் அவ்வாறு எதுவும் கூறவில்லை. இவ்வாறு அரசியல் வாதிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மக்கள் அவலத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைய செயற்படவேண்டுமே தவிர அரசியல் வாதிகளின் கோரிக்கைகளுக்க ஏற்ப செயற்பட முடியாது.

எனவே ஜே.வி.பி.யின் கொள்கைகளுக்கு அமைய அனைவரும் ஒன்றாகச் செயற்பட முடியும், ஒன்றாகச் செயற்பட வேண்டும். இதற்கு தடையாக இருப்பது என்ன? மக்களின் பிரச்சினைகளுக்கு தனித் தனியாகக் கூட தீர்வுகளை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு நாட்டில் உள்ள மக்களின் சின்னப் பிரச்சினைகள் கூட இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் அரசியல் தீர்வு யாப்பு மாற்றம் என எதுவும் கோர முடியாது.

**செவ்வி:-க.சதீபன்**

ஆனால் தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஜனாதிபதி தற்போது பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகிறார்.

நாட்டில் கடந்த பல வருடங்களாக இருந்து வந்த முதலாளித்துவ தலைமைகளினாலேயே இன்றைய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.அதனை மீட்டெடுக்க எவரும் முன்வரவில்லை.

### வடக்கு-கிழக்கின் இணைப்பும் பிரிப்பும்

**வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டமைக்கு ஜே.வி.பியே கூடுதல் பங்கு வகிப்பதாக அனைவராலும் கூறப்படுகின்றதே?**

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கும் பிரிப்புக்கும் இந்திய அரசே காரணமாக இருந்தது.

இந்தியா தனது தேசிய நலனைக் கருத் திற்கொண்டு இலங்கை அரசின் மீது திணிப்பை மேற்கொண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தம் மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைத்துக் கொண்டது. இதன் மூலம் நர்ட்டு மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

அதேபோன்று நீதிமன்ற உத்தரவில் பிரிக்கப்பட்டுள்ளதால் அதில் எந்தத் தீமையும் ஏற்படப்போவதில்லை. இப்பிரச்சினைக்கும் ஜே.வி.பிக்கும் எந்தவித பங்களிப்பும் இல்லை.

### நாட்டின் பிரச்சினை தீர்வுக்கு நடவடிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள குறிப்பாக வடக்கு-கிழக்கில் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கான, தீர்வுக்கான விசேட கவனம் செலுத்தப்படும்.

இதற்காக அனைவரும் இணைந்து செயற்படுவது அவசியமாகின்றது. ஆனாலும் அதற்குத் தடைகள் காணப்படுகின்றன. எனவே அனைத்து இன மக்களும் அனைத்துக் கட்சிகளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒன்றிணைந்து குரல் கொடுக்க முன் வரவேண்டும்.இதற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் ஜே.வி.பி. அழைப்பு விடுக்கும் என்றார்.

# ஒட்டுசுட்டான் பகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கை

(கொழும்பு)

இடம்பெயர்ந்த 449 பேர் நேற்று முன் தினம் ஒட்டுசுட்டான் பகுதியில் மீள்குடியேற்றப் பட்டதுடன் மேலும் நாளை 350 பேரை மீள் குடியேற்றத் திட்டமிட்டுள்ளதாக திட்டப் பணிப் பாளர் தெரிவித்தார்.

வவுனியா மெனிக்பாம் நலன்புரி முகா மில் தங்க வைக்கப்பட்டிருந்த 136 குடும்பங் களைச் சேர்ந்த 449 பேர் நேற்று முன்தினம் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப் பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அறிவித்தது.

ஒட்டு சுட்டான் பிரதேச செயலக பிரிவி லுள்ள பனிக்கன்குளம் மற்றும் அம்பகாமம் பிரதேச செயலக பிரிவுகளில் இவர்கள் மீள் குடியேற்றப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட திட்டப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

இதே வேளை நாளை சுமார் 350 பேர் மாங்குளம், பனிக்கன் குளம் மற்றும் ஏ-9 வீதியின் மேற்கே திருமுருகண்டி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் மீள்குடியேற் றப்பட உள்ளதாக அவர் கூறினார். (6-4)

# கொழும்பில் கடத்தல் கும்பல்கள் இயங்குவதாக எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் செல்வந்தர்களின் பிள்ளை களை கடத்தி கப்பம் பெற்றுக் கொள்ளும் கும்பல்கள் சில உருவாகியுள்ளதென தெரிவிக் கப்படுகிறது.

செல்வந்தர்களை அச்சுறுத்தி இலட்சக் கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் பாதாள உலகக் குழு மற்றும் கொள்ளைக் கூட்டங்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களை திரட்டியுள்ளனர்.

பிள்ளைகளை கடத்திச் செல்வதாக அச் சுறுத்தி இலட்சக்கணக்கான பணத்தைப் பெற் றுக் கொண்டுள்ளதாக இதுவரையில் 15 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வும் இவை அனைத்துமே அனாமேதய முறைப்பாடுகள் எனவும் தெரிவிக்கப்படு கிறது.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட அநேக சந்தர்ப்பங்களில் தொலைபேசி மூலமான அச்சுறுத்தல்களே விடுக்கப்பட்டுள் ளன என்றும் பத்து லட்சம் ரூபா முதல் பதி னைந்து லட்ச ரூபாய் வரையில் கப்பம் பெற் றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று தெரியவந் துள்ளது. (6-4)


## இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

**30ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் திறந்த பல்கலைக்கழக தினமும்**

திகதி:- 2010 யூன் மாதம் 23 மற்றும் 24 ஆம் நாள்
இடம்:- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், யாழ்.. பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

**தலைவர்**
பேராசிரியர் உபாலி விதானபத்திரன (துணைவேந்தர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் உமா குமாரசுவாமி
(முன்னாள் துணைவேந்தர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்கள்**
பேராசிரியர் நா. சண்முகலிங்கன்
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
திரு.க.கணேஸ்
(அரசாங்க அதிபர், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்)
திரு.வி.செல்வரட்ணம்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்)

**நிகழ்வுகளின் விபரம்**

**முதலாம் நாள் நிகழ்வுகள்**

| திகதி | நேரம் | நிகழ்வு |
|---|---|---|
| 23.06.2010 | 8.30-9.45 | விருந்தினர் வருகை<br>புதிய கட்டடம் திறந்து வைத்தல்<br>ஆரம்ப நாள் நிகழ்வுகள்<br>கல்விக்கண்காட்சியை திறந்து வைத்தல் |
| | 10.00-01.00 | ஊக்கலும் தலைமைத்துவமும்<br>டெங்கு நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எப்படி?<br>க.பொ.த.(உ/த)உயிரியல்/கணித பாடக் கருத்தரங்கு<br>க.பொ.த. (உ/த) இரசாயனவியல்/பௌதிக வியல் கருத்தரங்கு |
| | 2.00-3.00 | முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் மாணவரின் பெற்றோருக்குமான அமர்வு |
| | 3.00-4.00 | விசேட தேவையுடைய மாணவரின் பெற் றோருக்கான அமர்வு |
| | 4.00-5.00 | இலவசக்கல்வி பற்றிய வீதி நாடகம் |

- கல்விக் கண்காட்சி
- இலவச மருத்துவப் பரிசோதனை

3.00-5.00 சட்டக்கற்கைகள் தொடர்பான விசேட கருத்தரங்கு- யாழ். பிரதான வீதியில் உள்ள கலைத்தூது கலையக மண்டபத்தில் இடம்பெறும்.

**இரண்டாம் நாள் நிகழ்வுகள்**

24.06.2010 08.30-1.00 காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் பற்றிய புதிர்ப்போட்டி
திறந்த -தொலைக்கல்வி பற்றிய சுவரொட்டிப் போட்டி
கணனியை அடிப்படையாகக் கொண்ட பாலம் வடிவமைக்கும் போட்டி

- கல்விக் கண்காட்சி
- இலவச மருத்துவப் பரிசோதனை

9.00-4.00 இலவச சட்ட உதவி முகாம் -யாழ். பிரதான வீதியில் உள்ள கலைத்தூது கலையக மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இருநாள் நிகழ்வுகளிலும் கல்விக் கண்காட்சிகள் இலவச கல்வி ஆலோசனைகள் நடைபெறவுள்ளமையால் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அனைவரும் வருக! நிறை பயன் பெறுக!*

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்,
யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(இ)



## இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



## ஏழாம் திருவிழா

### அருள் தரவே வருவாயே

வீதியுலா எழுந்தருளும் மன்னவனே இணுவையூரா
மாநிலம் செழிக்க நீ அழகுற வருவாயே
மன்னவனே உன் உருவம் ஜொலிக்கின்றதே-எம்மை
மயக்க நீ பூண்ட கோலம் அழைக்கின்றதே
மங்கலம் பொங்க வரும் உன்னழகை – கண்ட
மாந்தர் தம் உள்ளங்கள் நிறைகின்றதோ
அடியார்க்கு அடியவனே அன்பர்க்கு அன்பனே
அகிலத்தை காத்து நீ ஆட்கொள் இணுவையானே
என்மனம் உன்னிடத்தில் உன் மனம் என்னிடத்தில்
ஏற்றமுற வைத்து நீ அருள்தரவே வருவாயே

இணுவில் கவி

### எம் துயர் போக்கியருள்

பஞ்சமது பறந்தோட
பாவமெல்லாம் விரைந்தோட
வெஞ்சினமாய் எமை வருத்தும்
வஞ்சகரின் தொல்லைகளகல
குஞ்சரி வள்ளியுடன் வந்தெம்
குறைகள் எல்லாம் தீர்த்திடவே
இணுவை பதி வீதியதில் நாள்தோறும் உலா வந்து
எம் துயரைப் போக்கியருள் உமை மைந்தா இணுவைக் கந்தனே!

தாவடி தெற்கு சொரூபி

### வேலை ஏந்தும் முருகன் காலடி

பல்லவி

வேலை ஏந்தும் முருகன் காலைப் பிடித்திடுவாய்
வாலைக்குமரி வள்ளி தேவகுஞ்சரி நாதன்

அனுபல்லவி

கோல மயில் மீதில் சீலமாய் அமர்ந்தருளும்
பால சுப்ரமண்யன் கோவில் கொண்ட இணுவை

சரணம்

கலியுக வரதன் கந்தன் கடம்பன் குகன்
நலிவெலாம் நீக்கிடுவார் நல்ல வரம் தருவான்
மலியும் பொழில்கள் நிறை மாநகர் இணுவையும்
பொலிய அருளும் கந்தன் புனிதன் அருள் தருவான்

வீரமணி ஐயர்

(1709)

அனுசரணை :- 7 ஆம் திருவிழா உபயகாரர்


# கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை அதிர்ச்சியளிக்கிறது

## எல்லாவெல மேதானந்தா தேரர் தெரிவிப்பு

கட்சித் தலைமைப் பதவியிலிருந்து திடீரென நீக்கப்பட்டமை அதிர்ச்சி அளிப்ப தாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன் னாள் தலைவர் எல்லாவல மேதானாந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பொறு ப்பை ஆரம் பத்திலே தான் வகித்து வந்த போதிலும் எந்த வித காரணங்களையும் தெரிவிக்காது திடீ ரென கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டமை அதிர்ச்சி அளிப்பதாக தெரி வித்தார்.

இதேவேளை கட்சியின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பதவி மாற்றங்கள் மேற் கொள்ளப்பட் டதாக கட்சியின் தேசிய அமைப் பாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித் துள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய எல்லா வல தேரர் தலைமைப் பொறுப்பிலிருந்து நீக் கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

கடந்த ஆறு ஆண்டு காலமாக இவர் கட்சி யின் தலைமைப் பொறுப்பை வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-4)

## நுழைவாயில் திறப்பு விழா


(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவி திருமதி யசோதரா ஜெய பால தேவனால் இளைப்பாறிய ஆசிரியை அமரர் திருமதி முத்தம்மா தம்பாப்பிள்ளை ஞாபகார்த்தமாக காங்கேசன் துறை வீதியில் அமைத்துக்கொடுக்கப்பட்ட மேற்குப்பக்க நுழைவாயில் திறப்புவிழா இன்று புதன் கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெற வுள்ளது. (6-4)



# செவ்வாயில் ஜாலி உலா!

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் உள்ள இன்ஸ்டிடியூட் ஒப் பயோ மெடிக்கல் வளாகம் சிறிது நேரத்தில் பரபரப்பாக வந்திறங்கினர். 6 விண்வெளி வீரர்கள். விஞ்ஞானிகளின் பலத்த ஆரவார மழையில்



நனைந்த அவர்கள் இலங்கை நேரப்படி ஜூன் 4 காலை 9.49 மணிக்கு அங்கிருந்த இராட் சத உலோக உருண்டையின் நுழை வாயிலில் நின்று கைகளை அசைத்து விட்டு உள்ளே நுழைந்தனர். சிறிது நேரத்தில் நுழைவாயில் மூடப்பட்டது. கவுன்ட் டவுன் ஸ்டார்ட்! ஐரோப்பிய விண்வெளி ஆய்வுக் கழகம் ரஷ்யாவில் தொடங்கியி ருக்கிற செவ்வாய் கோள் ஒத்துகைப் பயணத்தின் ஆரம்பக் காட்சி தான் இது!

உலகம் எப்படித் தோன்றியது என்று அறிய சுவிற்சர்லாந்து- ஜேர்மனி எல்லை யில் பிரபஞ்ச சோதனை (பிக்பேங் தியரி டெஸ்ட்) நடைபெற்று வருகிறது.

இச்சோதனையின் முடிவு கிடைப்ப தற்கு முன்பே அடுத்த சோதனைக்குத் தயாராகி விட்டனர் விஞ்ஞானிகள். சூரிய மண்டலத்தில் தவிர்த்து பல கோள்கள் துணைக்கோள்கள் என தனி ராஜ்ஜியமே நடக்கிறது. இவற்றில் மனிதர்கள் நெருங் கவே முடியாத கோளாகக் கருதப்படுவது செவ்வாய்.

ஆனால் எல்லா கோள்களையும் வசப் படுத்திட நினைக்கும் மனிதன் சும்மா விடு வானா? அங்கு மனிதர்கள் வாழ முடியுமா? தண்ணீர் கிடைக்குமா? வேறு உயிரினங்கள் இருக்குமா? இப்படி பல கேள்விகளை மையமாக வைத்து அமெரிக்கா, ரஷ்யா, இங் கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 1960 லிருந்தே ரவுண்டு கட்டி ஆய்வு செய்து வருகின்றனர்.

இதுவரை கிடைத்த தகவல்கள் எல் லாமே செவ்வாய் கோளை அவ்வளவு சுல பத்தில் நெருங்கி விட முடியாது என்பதே!

இருப்பினும் செவ்வாய் கோளில் இறங்கி ஆய்வு செய்து விட வேண்டும் என்ற விஞ்ஞானிகளின் தாகம் இன்னும் குறைந்த பாடில்லை. நிலவில் மனிதர்கள் இறங்கியது போல செவ்வாயில் யாருமே இறங் கியதில்லை. அதற்கு முக்கிய காரணம். அங்கு நிலவும் பருவ நிலை. அதிகபட்சமாக 68 டிகிரி பாரன்ஹீட் முதல் மைனஸ் 54 டிகிரி பாரன்ஹீட் வெப்ப நிலை அங்கு பதிவாகி றது.

காற்று மண்டலமும் மிக மெல் லியதா கவே இருக்கிறது. இதனால் அங்கு சென்றால் உடலியல் பாதிப்பு வருமா? அப்ப டியே இறங்கினாலும் தரைத்தளத்தில் நடக்க முடியுமா? இப்படி நிறைய சந்தே கங்கள் விஞ்ஞானி களை ஆட்டிப் படைத்து வருகின்றன. நேராக செவ்வாயில் இறங்கி ரிஸ்க் எடுப்பதை விட பூமியி லேயே செவ்வாய்க்கு செல்வதைப்போல ஒத்திகை செய்து வெற்றி பெற்றால் மனிதனை அனுப்பும் திட்டமும் வெற்றி பெறும் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வுக்கழகம் ரஷ்யா மற்றும் சீனா இணைந்து 2005 லிருந்து மார்ஸ் 500 திட்டத்தைச் செயல்படுத்துகின் றன. இத்திட்டத்திக் காக செவ்வாய் கோளில் நிலவும் சூழ் நிலையை அப்படியே அச்சு அசல் மாறாமல் ஒரு பிரமாண்ட உலோக உருண் டைக்குள் கொண்டு வந்திருக்கின்றனர். ஏற் கனவே இதே உலோக உருண்டையில் 2007 இல் 14 நாட்களும் கடந்த ஆண்டு 105 நாட் களும் ஒத்திகைப் பயணத்தை வெற்றி கர மாகச் செய்திருக்கின்றனர் விண்வெளி வீரர் கள்.

இந்த முறை மிக அதிகபட்சமாக 520 நாட்கள் தங்கி ஒத்திகையில் ஈடுபட இருக் கின்றனர். இதற்காகத் தேர்வு செய்யப்பட்ட 6 விண் வெளி வீரர்கள் பிரத்யேக இராட்சத உலோ உருண்டையில் இறங்கி ஆய்வைத் தொடங்கி யிருக்கின்றனர். ஒத்திகைப் பயண ஆய்வின் முக்கிய நோக்கமே செவ்வாய் எப் படி இருக்கும்? அதில் நடக்க முடியுமா? என் பது தான். அதற்கேற்றபடி உலோக உருண் டையில் பாறைகள் மணல் திட்டுகள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன.

உருண்டையில் இறங்கியவுடன் விண் வெளி வீரர்கள் செவ்வாய் கோளில் இறங் கியது போன்ற உணர்வுக்கு வந்து விடுவார் கள். இதற்காக கடந்த ஓராண்டாக இவர் களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டிருக் கிறது. செவ்வாயில் அளவுக்கு அதிகமாக கார்பன்டை ஒக்ஸைட் இருப்பதாகக் கணித்தி ருக்கிறார்கள் விஞ்ஞானிகள். அதற் கேற்ப உலோக உருண்டையிலும் கார்பன் உருண்டை யிலும் கார்பன்-டை- ஒக்ஸைட் நிரப்பப் பட்டிருக்கிறது.

எனவே சகல வசதிகளும் கொண்ட விண்வெளி உடைகளும் தயார் செய்து அதை அணிந்து கொண் டே வீரர்கள் சென்றிருக்கி றார்கள். இந்த ஒத்திகையில் உடல், மனரீதி யாகச் சந்திக்கும் பிரச்சினைகள் தகவல்கள் ஆகியவற்றை உடனுக்குடன் விஞ்ஞானிக ளுடன் பரிமாறிக் கொள்ளவும் ஏற்பாடு செய் யப்பட்டிருக்கிறது. போன் மூலம் தொடர்பு கொள்ள முடியாது. இ-மெயில் ஒன்று தான் வழி!

உலோக உருண்டையின் இன் னொரு பக்கம் விண்கலம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் தனி படுக்கை அறை உணவு அறை புத்தகம் படிக்கும் அறை கணனி அறைகளும் ஏற்படுத்தப்பட்டி ருக்கின்றன. தண்ணீர் மற்றும் கேன் உணவுகளை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இதை யே 520 நாட்களும் பயன்படுத் திக் கொள்ள வேண்டும் போர டித்தால் செஸ் விளையாட லாம்... புத்தகம் படிக்கலாம்.... கணனி கேம்ஸ் விளையாட லாம்.

என்ன தான் வசதி செய்தா லும் குடும்பத்தைப் பிரிந்தி ருப்பது மனரீதியான பாதிப்பு ஏற்படுத்தும் என்பதை அறிந்தே வைத்திருக்கின்றனர் விஞ்ஞானிகள். மனரீதியான பாதிப்பு வராமல் இருக்கவும் கடந்த 6 மாதங்களாகத் தனித் தனியாக ஒவ்வொரு வீரருக்கும் பயிற்சி அளிக் கப்பட்டிருக்கிறது.

யாருமே நுழைய முடியாத மர்மதேச மாக விளங்கும் செவ்வாய் கோளில் நேரடி யாக இறங்கும் போது ஏற்படும் பாதிப்பு களை முன்கூட்டியே அறியவே இந்த ஒத் திகை. ஒருவேளை வீரர்களால் ஒத்திகைப் பயணத்தை தாக்குப் பிடிக்க முடியாமல் போனாலோ உடல்நிலை பாதிக்கப்பட்டாலோ உடனே திட்டத்தில் இருந்து விலகிக் கொள் ளலாம்.

அடுத்த ஆண்டு நவம்பர் 6 அன்று ஒத் திகைப் பயணம் நிறைவு பெறும் என்கிறார் திட்ட இயக்குனர் அனாடோலி

## ஒத்திகை ஆரம்பம்



கார்போவ். விஞ்ஞானிகளின் முயற்சிகளுக்கு வெற்றி கிடைத்தால் செவ்வாயில் ஜாலியாக உலாவரும் காலம் வெகு தொலைவில் இல்லை!

# உலகைச் சுற்றி

AROUND THE WORLD

ஆர்.யூ.பாலமுருகன்

## யார் யாரோ?

ஒத்திகைப் பயணத்தில் இடம் பெற்றுள்ள 6 விண்வெளி வீரர்களும் 40 வயதுக்குட் பட்டவர்களே. வீரர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் உதவும் வகையில் மருத்துவ நிபுணரும் மனோ தத்துவ நிபுணரும் இக்குழுவில் களமிறக்கப் பட்டுள்ளனர்.

பிரான்ஸ்- ரோமெய்ன் சார்லஸ்(வயது 31) -மெக்கானிக்கல் இன்ஜினியர்

இத்தாலி- டீகோ உர்பினா (27) - எலக்ட் ரோனிக்ஸ் இன்ஜினியர்.

சீனா- யுவாங் (27)- வானியல் நிபுணர்.

ரஷ்யா- அலெக்சி செர்கவிச் சிடேவ் (38) இராணுவ வீரர்.

ரஷ்யா- அலெக்ஸாண்டர் எக்ரோவிச் ஸ்மோலிவ்ஸ்கி(32)- மனோ தத்துவ நிபுணர்.



ஒத்திகை ஹீரோஸ்

# தூவானம்

### கா...கா.. கா...

மணிக்காக்கை, அண்டங் காக்கை, கள்ளிக்காக்கை, நீர்காக்கை, கத்திரி மூக்குக் காக்கை, கலிக்கிகாக்கை மாட்டுப் புழுக் காக்கை, வெள்ளைக்காக்கை அப்ப ப்பா... மூச்சுவாங்குகிறதா? இவையெல் லாம் இங்கிலாந்தில் காணப்படும் காகங்களின் வகைகள் நம் நாட்டில் மணிக் காக்கை அண்டங்காக்கை, நீர்க்காக்கை என மூன்று வகைதான்!

### மருந்தாகும் மீன்!

கருங்கடலில் உள்ள டாக்ஃ பிஷ் எனப்படும் சுறாமீன்கள் ஜார்ஜியா வில் பெருமளவு பிடிக்கப்படுகின் றன. காத்ரெக்ஸி எனும் மருந்து தயாரிக்க அவை பயன்படுத் தப்படுகின்றன. அழற்சிகள் மூட்டு வீக்கங்கள் ஆகிய வற்றை குணப்படுத்த சிறந்த மருந்தாக இது பயன்படுகி றது.

### சூளை பார்க்காதசெங்கல்

செங்கல் உரு வாக்க களிமண், சூளை, நெருப்பு எல் லாம் இனி தேவையே இல்லை. நிலக்கரி சாம்ப லில் இருந்தே செங்கல் உரு வாக்கி விடலாம்!

நிலக்கரி சாம்பல், சுண் ணாம்புத்தூள், ஜிப்சம் ஆகி யவை இருந்தால் போதும் இவற்றைச் சேர்த்து அரைத்து அச்சுகளில்வார்த்து காயவைக்க வேண்டும். பின்னர் நீர் தெளித்து பதப்படுத்திஇன்னும் கொஞ்சம் உறுதியாக்க வேண்டும் .பின்னர் அச்சுக்களிலிருந்து உதிர்த்தால் போதும் செங்கற்கள் வந்துவிழும் அவ்வளவு தான் சூளை வேண் டாம் நெருப்பு வேண் டாம்.



மெழுகு தலையர் வெயிலில் நடக்கக் கூடாது.

– இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எம் இனமே! எம் சனமே! எம்மை எமக்குத் தெரிகிறதா?

செம்மொழி மாநாடு இன்று தமிழகத்தில் ஆரம்பமாகின்றது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி செம்மொழி மாநாட்டை நடத்த வேண்டும் என்று விரும்பினார்.

முன்பு நடந்த தமிழ் மாநாடுகளில் எல்லாம் சீர்குறைவு இருந்ததாம். இம் மாநாடு செம்மொழி மாநாடு என்பதால், தமிழுக்கு ஒய்யாரப் பெருவிழாவாம். தமிழுக்கு விழா எடுப்பதை எந்தத் தமிழனும் எதிர்க்க மாட்டான்.

ஆனால் அந்த விழா தமிழுக்கு மட்டும் விழாவாக அமையக் கூடாது. மாறாக தமிழனுக்கு வாழ்வாகவும் அமைய வேண்டும். எனினும் துரதிர்ஷ்டவசமாக தமிழ்மொழி விரும்பிகள் தமிழையும்–தமிழனையும் வேறுபடுத்திப் பார்க்கின்றனர்.

தமிழ்வேறு, தமிழன் வேறு என்ற ஓர் உறுதியான நிலைப்பாடு இருந்தால் மட்டுமே வேறு எவ்வகையிலும் செம்மொழி மாநாடு நடப்பதற்கு வாய்ப்பில்லை எனலாம்.

கலைஞர் மு.கருணாநிதி நடத்தும் செம்மொழி மாநாடு தமிழ்மொழிக்கு ஒய்யாரப் பெருவிழாவாக, அமைய வேண்டுமாயின் உலகு வாழ் தமிழ் மக்கள் உரிமையோடு–தன்மானத்தோடு, தனித்துவத்தோடு வாழ்ந்தாக வேண்டும்.

ஆனால் தமிழகத்தையடுத்த ஈழத்தில் தமிழர்களாகிய எங்கள் வாழ்வு நிலை எப்படி இருக்கிறது என்று ஒரு கணம் நோக்கினால்,

முகாம் வாழ்வு, குடியிருக்க முடியாத பரிதாபம், சொத்தழிப்பு, உயிரிழப்பு இதற்கு மேலாக எங்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்க எவருமேயில்லாத வெறுமை வாழ்வு.

இதுவே எங்கள் வாழ்வாக இருக்க, செம்மொழி மாநாட்டைக் கூட்டி அழகு தமிழில் உலகு வாழ் தமிழினமே, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி என்று கலைஞர் முழங்க,

கூட்டத்தில் கூடியிருப்பவர்கள் கரகோஷம் போட, வன்னி யுத்தத்தில் பலியாகிப் போன சுமார் நாற்பதாயிரம் தமிழ் மக்கள்,ஈழ யுத்தத்தில் பலியாகிப் போன இலட்சக் கணக்கான ஆன்மாக்கள், ஈழத் தமிழர்களின் துயர் கண்டு தீக்குளித்த தமிழகத்தின் சகோதரர்கள், செங்குருதியைக் கண்ணீராக்கி செம்மொழி மாநாட்டுக்கு அபிஷேகம் செய்வர்.

ஆக, வாழ விரும்பி வதைபட்டு, உயிர் அறுபட்டுப்போன ஈழத் தமிழர்களின் குருதியில் நனைந்த தமிழுக்கு நடக்கும் மாநாடு என்பதால் அது செம்மொழி மாநாடென்றாயிற்று என்றே நாம் இம் மாநாட்டுக்குப் பொருள் கூறுவோம்.

பரவாயில்லை. செம்மொழி மாநாடு தமிழகத்தில் நடக்கட்டும். அறிஞர்கள் அழகு தமிழில் பொங்கி முழங்கட்டும்.

நாங்கள் எங்கள் தாயகத்தின் அரச மரங்களில் குடியிருக்கும் கௌதம புத்தபிரானுக்குக் கற்பூர தீபம் காட்டுவோம்.

பாலியல் வல்லுறவுகள், காணாமல் போனவர்களின் பட்டியல் படையல்கள், அநாதை இல்லங்களில் பிரித் ஓதப் பழகும் தமிழ்க் குழந்தைகளின் வெண்பாக்கள், சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்களின் பரிதாபங்கள் இவற்றையெல்லாம் தாம்பாளத்தில் வைத்துக் கலைஞருக்குக் காணிக்கையாக்குவோம்.

கூடவே ஓம் கலைஞரே நமஹ, ஈழத் தமிழர் குருதி நந்திக் கடலில் கலக்க, கறுத்தக் கண்ணாடியுடன் எதுவுமே தெரியாதவர்போல இருந்து மத்திய அரசை ஆதரித்த முத்துவேலு மகனே நமஹ, உன் போலிப் பேச்சில் எங்கள் மூச்சுப் போனதைக் கண்டோம் நமஹ.

இந்த மந்திரத்தை உச்சரிக்க எம் இனமே! எம் சனமே! எம்மை எமக்குத் தெரிகிறதா? என்ற பாடல் கூட்டுப் பிரார்த்தனையின் பஜனைப் பாடலாக அமையட்டும்.

# உயர்தர மாணவர்களுக்கு புலமைபரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் 2010/2012 கல்வியாண்டுக்குரிய க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

இப் புலமைப் பரிசிலுக்கு க.பொ.த.(சா/த) 2009இன் பரீட்சை பெறுபேற்றை உடையவராக இருப்பதுடன் பரீட்சையின் மூலமொழி கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒரே தரத்தில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மேலும் பெற்றோரின் வருடாந்த வருமானம் 54 ஆயிரம் ரூபாய் அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பபத்திரங்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரிவுகளினூடாக இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் எனவும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து பாடசாலை அதிபரின் ஊடாக எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு செஞ்சிலுவைச் சங்க தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (ச–4)

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண பொதுக் கூட்டம் எதிர்வரும் யூலைமாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் சி.கிருபாகரன் தலைமையில் நடைபெறும்.

எனவே கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பதாக கல்லூரியின் அலுவலகத்தில் சந்தாப்பணத்தைச் செலுத்தி அங்கத்தவராகப் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்பவர்கள் மட்டுமே பொதுக்கூட்டத்தில் நிர்வாகசபைத் தெரிவின்போது வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## 781 இலக்க பஸ்சேவையை மாலையில் நடத்தக் கோரிக்கை

(சித்தன்கேணி)

இலங்கை போக்குவரத்துச் சபையால் ஈடுபடுத்தப்படும் மாதகலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான 787 இலக்க பஸ் சேவை சில மாதங்களுக்கு முன்பு மாலை வேளையில் சேவையில் ஈடுபட்டது.

எனினும் தற்பொழுது இவ் பஸ் சேவை நடத்தப்படுவதில்லை என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இச்சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகள் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணத்தில் சேவையை நிறுத்திவிடுவதாகவும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் மாலையில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் எனவும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இந்நடவடிக்கையில் கவனம் செலுத்தி மாலை வேளையில் 6.45 மணிக்கு பின்பு இலக்கம் 787 யாழ்ப்பாணம் தொடக்கம் மாதகல் வரை இலங்கை போக்குவரத்து சபை பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6–17)

# நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு இலங்கை அரசு சம்மதம் தெரிவித்தால், மட்டுமே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்கு வழங்க முடியும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்கு வரிச்சலுகையை நீடிப்பது தொடர்பில் நாம் இலங்கை அரசுக்கு தெரிவித்துள்ளோம். ஆனால் அவர்கள் நாம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உடன்படுவதுடன் எழுத்து மூலமான சம்மதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும் .

ஜுலை மாதத்தில் இருந்து எதிர்வரும் 6 மாதங்களுக்குள் நாம் தெரிவிக்கும் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும்.மேலும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையின் நிபந்தனைகளையும் அது பூர்த்தி செய்ய வேண்டும்.

எதிர்வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதி வரிச்சலுகை நிறுத்தப்படவுள்ளது. அதனை தொடர்ந்து பெறவேண்டுமாயின் இலங்கை அரசு வருகின்ற யூலை மாதம் முதலாம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். அதனை நாம் சபையில் விவாதித்து தீர்மானங்களை மேற்கொள்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6–4)

## நீதிமன்றப் பதிவாளர் நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 6 1/2 வருட காலமாக பதிவாளராக கடமையாற்றிய வீரகத்தி சிவராசசிங்கம் நீதிச்சேவைஆணைக்குழுவின் செயலாளரினால் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை யாழ் நீதிமன்றத்தின் பதிவாளராகக் கடமையாற்றி வந்த சின்னத்துரை ராஜேஸ்வரன் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (6–24)

## யாழ்.முகாமையாளர் சம்மேளனம் நடத்தும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் முகாமையாளர் சம்மேளனமும் வடபிராந்திய இலங்கை பொறியியலாளர் சங்கமும் இணைந்து நடத்தும் உணவு உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக சிறிய நீர்ப்பாசன குளங்களின் நடைமுறைக் கொள்கைகளை மாற்றியமைத்தல் என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு இன்று புதன்கி ழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இலங்கை மின்சாரசபை பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர். முத்துரட்ணானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் Enrep திட்ட இயக்குநர் கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமாரன் கருத்துரை வழங்கவுள்ளதுடன் யாழ் குடாநாட்டில் நிலத் தடி நீர்த்தன்மையும் இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து பாரிய நீர் வழங்கல் என்னும் விடயம் பற்றி நீர் வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளரான பொறியியலாளர் எஸ். சுகன்யா பாஸ்கரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (6–4)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### வாழ்க்கை



இந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டே பரிசுத்தத்தை எப்படி அடைவது? நாம் எல்லோரும் காட்டில் உள்ள குகைகளுக்குப் போவோமா? அதனால் என்ன நன்மை வந்து விடும்? மனம் கட்டுப்பாட்டிற்குள் இல்லா விட்டால் குகையில் வாழ்வதில் எந்தப்பயனும் இல்லை. அதே மனம் எல்லாத் தொந்தரவுகளையும் அங்கேயும் கொண்டு வரும். குகையில் இருப்பது பேய்களைப் பார்ப்பீர்கள், ஏனெனில் எல்லாப் பேய்களும் மனதில் தான் உள்ளன. மனம் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் குகை எங்கு வேண்டுமானாலும் கொண்டு வரலாம்;

நாம் இருக்கும் இடத்திலேயே அந்தச் சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ளலாம். உலகம் நமக்கு எப்படித்தோன்றுகிறது. என்பது நமது மனப்பான்மையைப்பொறுத்தது.

# முள்ளிவாய்க்கால் சம்பவத்தை உலகம் மறந்தாலும் நாம் மறக்கக்கூடாது

## தற்கொலை செய்த மாணவரின் பரபரப்புக் கடிதம்

(சென்னை)

பெரியமேடு ஈ.வே.ரா. பெரியார் நெடுஞ்சாலையில் அரசு கவின் கலைக்கல்லூரி எனப்படும் ஓவியக்கல்லூரி உள்ளது. இங்கு தமிழகம் முழுவதும் இருந்து மாணவர்கள் படிக்கிறார்கள். தற்போது மாணவர்களுக்கு பரீட்சை நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் பரீட்சை எழுவதற்காக மாணவர்கள் திரளாக வந்தனர். அப்போது கல்லூரி வளாகத்தில் உள்ள 60 அடி உயரமரத்தில் வாலிபர் ஒருவர் பிணமாக தொங்கினார்.

நைலோன் கயிற்றில் தூக்குப்போட்டு பிணம் தொங்கி கொண்டிருந்தது. இதைப் பார்த்த மாணவர்கள் பதறியடித்து கல்லூரி முதல்வருக்கும் பொலிஸாருக்கும் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து தூக்கில் பிணமாக தொங்கியது அதே கல்லூரியில் முதுகலை முதலாம் ஆண்டு படிக்கும் மாணவர் சசிகுமார் (வயது 26) என்று தெரியவந்தது.

பிணம் 60 அடி உயர மரத்தில் தொங்கியதால் , பிணத்தை இறக்க தீயணைப்புத் துறையினர் வரவழைக்கப்பட்டனர். தீயணைப்புத்துறையினர் இராட்சத ஏணிகளின் உதவியோடு பிணத்தை மரத்தில் இருந்து கீழே இறக்கினார்கள்.

பொலிஸ் விசாரணையின் போது மாணவர் சசிகுமார் தற்கொலை செய்து கொண்டது தெரிவந்தது. சசிகுமாரின் பிணத்தை பிரேத பரிசோதனைக்காக அரசு பொது மருத்துவமனைக்கு பொலிஸார் அனுப்பி வைத்தனர். மாணவர் சசிகுமார் இளங்கலை பட்டப்படிப்பும் அதே கல்லூரியில் தான் படித்தார்.

மதுரை அருகேயுள்ள விளாங்குடி இவரது சொந்த ஊர். இவரது தந்தை பெயர் நடராஜன். விருகம்பாக்கத்தில் தனது நண்பரோடு தங்கியிருந்து படித்து வந்தார்.

அவர் ஏன் இந்த சோக முடிவுக்கு வந்தார் என்பது பற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

மாணவர் சசிகுமாரின் காற்சட்டைப் பொக்கற்றில் இருந்து 10 பக்கத்தில் தமிழில் அவர் எழுதி வைத்திருந்த பரபரப்பான கடிதத்தை பொலிஸார் கைப்பற்றினார்கள்.

அக்கடிதத்தில் உலக இனத்தில் தமிழ் இனம் தலை சிறந்த இனமாகும் என்றும் உழைப்பதற்காக வாழ்ந்த உயர் தமிழன் அடிமைப்பட்டு கிடப்பதா? பாலைவனத்தை சோலைவனமாக மாற்றும் மந்திரவாதிகள் தமிழர்கள்.

முள்ளிவாய்க்கால் சம்பவத்தை உலகம் மறந்தாலும் நாம் மறக்கக் கூடாது. வீடு தோறும் மரம் வளர்ப்போம். இல்லை யென்றால் குடிநீர் விற்பனையாவது போல காற்றும் வியாபாரமாகிவிடும். மரம் எழுப்பும் கொள்கைக்காக என்னையே சமர்ப்பிக்கிறேன். எனக்காக கண்ணீர் சிந்தாதீர்கள். வாழ்த்தி வழியனுப்புங்கள்.

தயவு செய்து எனது உடல் உறுப்புகளை தானம் கொடுத்து விடுங்கள். பிறந்த பூமியில் என்னை தவழவிடுங்கள். அசையாத புகைப்படமாக இருப்பதைவிட அசைந்தாடும் மரமாக நான் எழுவேன்.

நிகழ்காலமே எதிர்காலத்திற்கு நீ நிழல் கொடு. தமிழே உனக்கு தெரியாமல் உன்னை நான் நேசிக்கிறேன் என்றும் அவரது கடிதத்தில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6)

## சீனா நிலக்கரி சுரங்க வெடிவிபத்தில் 46 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 46 பேர் பலியாகினர்.26 தொழிலாளர்கள் உயிர் தப்பினர்.

சீனாவின் மத்திய கெனான் மாகாணத்தின் பிங்டிங்சான் நகரில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் நேற்று அதிகாலை கியாஸ் வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் சிக்கி 46 சுரங்க தொழிலாளர்கள் பலியாகினர். 26 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மொத்தம் 76 பேர் சிக்கிய இந்த வெடிவிபத்தில் மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (6-4)

## போலந்து ஜனாதிபதித் தேர்தல் முடிவில் இழுபறி நீடிப்பு

(வார்சா)

போலந்து நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கும் வெற்றி கிடைக்காமல் இழுபறி நீடிக்கிறது. இதனால் அடுத்த சுற்று தேர்தல் ஜுலை 4 ஆம் திகதி நடைபெறும் என குறிப்பிடப்படுகிறது.

போலந்து ஜனாதிபதியாக இருந்த லெக் கசின்ஸ்கி கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ரஷ்யா சென்ற போது விமான விபத்தில் உயிரிழந்தார். அவருடன் சென்ற அவரது மனைவி மற்றும் உயர் அதிகாரிகள் 96 பேர் விபத்தில் உயிரிழந்தனர்.

இதை அடுத்து இடைக்கால ஜனாதிபதியாக அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர் புரோனிஸ்லா கொமொரொவ்ஸ்கி பதவியேற்றார்.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் தான் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். எனினும் இடைக்கால ஜனாதிபதி கொமொரொவ்ஸ்கி முன் கூட்டியே தேர்தலை நடத்த திட்டமிட்டு அதற்கான அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி கடந்த ஞாயிற்றுக் கிழமை ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் மொத்தம் 10 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். எனினும் இடைக்கால ஜனாதிபதி கொமொரொவ்ஸ்கிக்கும் உயிரிழந்த ஜனாதிபதியின் சகோதரர் ஜரோஸ்லா கசின்ஸ்கிக்கும் இடையேதான் முக்கிய போட்டி நிலவியது.

போலந்து நாட்டின் விதிமுறைப்படி பதிவான வாக்குகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறுபவர்களே வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்படுவார்கள். இந்நிலையில் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் இடைக்கால ஜனாதிபதி கொமொரொவ்ஸ்கி முன்னிலை யில் உள்ளார்.

ஜரோஸ்லா இரண்டாமிடத்தில் உள்ளார். எனினும் யாருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இரண்டாம் சுற்று தேர்தல் நடத்தப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

10 வேட்பாளர்களில் 8 பேர் முதல் சுற்று தேர்தலில் வெளியேறிவிடுவர். முதல் இரண்டு இடங்களை பெறும் வேட்பாளர்களுக்கு இடையே ஜுலை 4 ஆம் திகதி இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெறும்.

இதில் யாரேனும் ஒருவருக்கு நிச்சயம் 50 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகள் கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது. அதில் வெற்றி பெறுபவர் அதிபராக அறிவிக்கப்படுவார். (6-4)

## ஐ.நா. கண்காணிப்பாளர்களுக்கு ஈரான் அரசாங்கம் தடை விதிப்பு

(தெஹ்ரான்)

ஈரானுக்குள் இரண்டு ஐ.நா. கண் காணிப்பாளர்கள் நுழைய அந்நாட்டு அரசு கடந்த திங்கட்கிழமை தடை விதித்துள்ளது.

ஈரான் நாட்டின் அணு ஆராய்ச்சிகளைப் பற்றி பத்திரிகைக்கு தவறான செய்தியைத் தந்த காரணத்திற்காக இருவரையும் தடை செய்வதாக அந்நாட்டின் அணு மையத்தின் தலைவர் அலி அக்பர் சாலீஹி கூறியுள் ளார்.

இந்தத் தடையைப் பற்றி சர்வதேச அணு சக்தி மையத்திற்கு தெரிவிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ,ஈரானின் அணு உலைகள் ஆபத்தானவை என்றும் அணு குண்டுகள் தயாரிப்பதாகவும் குற்றம் சாட்டியிருந்தன.

ஆனால் இதற்கு ஈரான் அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. சர்வதேச அணு ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் தெஹ்ரானில் உள்ள ஜபீர் ஹேஆன் ஆராய்ச்சி மையத்தை கடந்த மே மாதத்தில் சோதனை மேற்கொண்டனர். அப்போது இராசயனத்தை கொண்டு தயாரிக்கும் அகற்றும் படி கூறியது குறிப்பிடத்தக்கது. (6)

## பிரேசிலில் வெள்ளப் பெருக்கால் உயிரிழந்தோர் 31 ஆக உயர்வு

பிரேஸிலின் வட கிழக்குப் பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் சுமார் 600 பொதுமக்கள் காணாமல் போயிருப்பதுடன் 10 ஆயிரம் பொதுமக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள் ளனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதே வேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஹெலிகொப்டர் மூலமாக மீட்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மோசமான காலநிலை தொடர்ந்து நீடிப்பதால் அங்கு மீட்புப் பணிகளை மேற்கொள்வதிலும் சிரமம் காணப்படுவதாக செய்திகள் குறிப்பிடுகின்றன. இதேவேளை வட கிழக்கு பிரேஸிலில் கடந்த 2009 ஆம் ஆண்டு பெய்திருந்த கடும் மழை காரணமாக ஏற்பட்டிருந்த வெள்ளப் பெருக்கால் 49 பேர் உயிரிழந்திருந்ததுடன் பலர் இடம்பெயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## அமெரிக்காவில் எண்ணெய் கசிவை தடுக்க 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவு

(லண்டன்)

அமெரிக்காவில் லுசியானாவில் உள்ள மெக்சிக்கோ வளைகுடாவில் கடலில் பிரிட்டிஷ் பெற்ரோல் நிறுவனத்துக்கு சொந்தமான எண்ணெய்க்கிணறு தீப்பிடித்து எரிந்தது. இதனால் அதில் இருந்து வெளியான பெற்றோலியம் கடலில் கலந்து மாசு ஏற்படுத்தியுள்ளது.

இதனால் கடல்வாழ் உயிரினங்கள், மீன்கள் மற்றும் கடல் பறவைகள் பாதிப்பிக்குள்ளாகியுள்ளது. எனவே கடலுக்குள் இருந்து வெளியாகும் எண்ணெய் கசிவை தடுக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

ஆனால் எண்ணெய் கசிவை தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்த நிலையில் மெக்சிகோ வளைகுடாவில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவை தடுத்து நிறுத்தவும் எண்ணெய் கிணறு எரிந்ததால் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்துக்கு நஷ்ட ஈடு போன்றவை வழங்கவும் இதுவரை ரூ. 10 ஆயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனத்தின் தலைமை நிர்வாகி டோனி ஹேவார்டு தெரிவித்துள்ளார். லண்டன் பங்கு சந்தை நிறுவனத்துக்கு அளித்துள்ள அறிக்கையில் இதை அவர் அறிவித்துள்ளார். (6-4)

## ஈராக்கில் குண்டு வெடிப்பு; 6 பொலிஸார் உட்பட 8பேர் பலி

ஈராக்கின் வட பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குண்டு வெடித்ததில் 6 பொலிஸார் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர். இந்த வெடி குண்டுவெடிப்பில் யாருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை. எனினும் குண்டு வெடிப்புக்கான காரணங்களை ஆராயவும் சேதங்களை மதிப்பிடுவதற்காகவும் பொலிஸாரும் பொதுமக்களும் அந்த இடத்தில் பெருமளவு கூடினர்.

அப்போது திடீரென மற்றொரு குண்டு அந்த இடத்தில் வெடித்தது. இதில் 6 பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் 18 பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (4-6)



எகிப்தின் தலைநகர் ஹெய்ரோவில் சர்வதேச அணுசக்தி மையத்தின் புதிய தலைவர் யூகியா அமனோ அணுசக்தி உலை பற்றி எகிப்திய பிரதமர் அகமத் நஜிப்புடன் விவாதிப்பதை படத்தில் காணலாம்.

# ஹோன்டுராஸ் அணியை வென்று ஸ்பெயின் அணி நம்பிக்கை

(ஜோகனஸ்பேர்க்)

ஸ்பெயின், ஹோண்டுராஸ் அணியை 2-0 என்ற கோல் க்ணக்கில் தோற்கடித்து நம்பிக்கை அளித்தது.

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த எச் பிரிவு ஆட்டத்தில் ஸ்பெயின், ஹோண்டுராஸ் அணியை ஜோகனஸ்பேர்க் எல்லீஸ்பார்க் மைதானத்தில் சந்தித்தது.

கத்துக்குட்டி ஹோண்டுராஸுக்கு இழக்க ஒன்றும் இல்லை. ஸ்பெயின் முதல் போட்டியில் சுவிட்சர்லாந்திடம் 1-0 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி தோல்வி கண்டது. எனவே இன்றைய ஆட்டத்தில் கட்டாய வெற்றி தேவை என்ற நிலையில் களம் இறங்கியது.

சுவிட்சர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் மாற்று ஆட்டக்காரராக களம் இறங்கிய லிவர்பூல் ஸ்டிரைக்கர் பெர்னான்டோ டார்ரஸ் இந்த போட்டியில் டேவிட் வில்லாவுடன் இணைந்து தாக்குதல் ஆட்டத்தை தொடங்கினார்.

டார்ரஸ் களம் இறங்கியதாலோ என்னவோ ஸ்பெயினுக்கு ஆரம்பமே அமர்க்களமாக அமைந்தது. ஆட்டம் ஆரம்பமாகி 17ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் டேவிட் வில்லா முதல் கோல் அடித்து ஐரோப்பிய சம்பியனுக்கு நாம சம்பியன்தான் என்று நினைவு படுத்தினார்.

இரு தடுப்பாட்டக்காரர்களை மடக்கிய வில்லா மிக அழகாக பந்தை வலைக்குள் அடித்தது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. ஸ்பெயின் 1-0 என்று முன்னிலை பெற்றது.

கோல் வாங்கிய ஹோண்டுராஸ் வீரர்கள் முரட்டு ஆட்டத்துக்கு மாறினர். மஞ்சள் அட்டைகளையும் சகட்டு மேனிக்கு பெற்றனர். அதற்கெல்லாம் அவர்கள் கவலைப்பட்டது மாதிரி தெரியவில்லை. பந்துடன் வந்தால் பந்தை விட்டுவிட்டு ஸ்பெயின் வீரர்களை துவம்சம் செய்தனர். இதனால் அடிக்கடி நடுவரிடம் போயும் நின்று கொண்டிருந்தனர்.

முதல் பாதியில் மட்டும் ஸ்பெயினுக்கு 10க்கு மேற்பட்ட வாய்ப்புகள் கிடைத்தது. அத்தனையும் வீணாயின. இந்த 45 நிமிடத்தில் ஸ்பெயின் அணியினால் ஒரே ஒரு கோல் மட்டுமே அடிக்க முடிந்தது.

பிற்பாதியில் 50 ஆவது நிமிடத்தில் நவாஸ் கொடுத்த பாஸை மீண்டும் கோலாக்கினார் டேவிட் வில்லா. ஸ்பெயின் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. ஹோன்டுராஸ் வீரர்களுக்கு கோல் அடிப்பதில் குறி இல்லை. ஸ்பெயின் வீரர்களை கோட்டா எடுப்பதில்தான் குறி இருந்தது.


இதன் பயனாக 60ஆவது நிமிடத்தில் ஸ்பெயினுக்கு ஒரு பெனால்டி கிடைத்தது. வில்லா அதனை வெளியே அடித்து வீணடித்தது, ஸ்பெயின் ரசிகர்களுக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்தியது.

ஏன் என்றால் எச் பிரிவை பொறுத்தவரை அடுத்த சுற்று ஆட்டம்தான் இரண்டாவது சுற்றுக்குள் நுழையும் அணிகளை தீர்மானிக்கும். எனவே அதிக கோல் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது ஸ்பெயினுக்கு அவசியம்.

டேவிட் வில்லா இதனை புரிந்து கொண்டு கோலாக மாற்றியிருக்க வேண்டும். இதனால் ஸ்பெயின் மூன்றாவது கோல் வாய்ப்பு பறிபோனது.

இறுதிவரை ஹோன்டுராஸ் வீரர்கள் ஸ்பெயின் அணியை சமாளித்து விட்டு கரையேறினார்கள். இறுதியில் ஸ்பெயின் 2-0 என்று வெற்றி பெற்று தொடரில் மூன்று புள்ளிகளை சம்பாதித்தது. அடுத்த ஆட்டத்தில் ஸ்பெயின் சிலி அணியையும் ஹோன்டுராஸ் சுவிட்சர்லாந்து அணியையும் சந்திக்கின்றன. இதில் ஸ்பெயின் சுவிட்சர்லாந்து இரு அணிகளுமே வெற்றிபெற வாய்ப்பு உண்டு.

ஸ்பெயினும் சுவிட்சர்லாந்தும் தலா 6 புள்ளிகள் பெறும்பட்சத்தில் கோல் வித்தியாசத்தின் அடிப்படையில்தான் அடுத்தசுற்றுக்குள் ஸ்பெயின் நுழைய முடியும். டேவிட் வில்லா கோட்டைவிட்ட பெனால்டியின் மதிப்பு அப்பொழுதுதான் தெரியவரும். இந்தப் பிரிவில் சிலி இரு வெற்றிகளுடன் 6 புள்ளிகள் பெற்றுள்ளது. இந்த அணியும் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவது இன்னும் உறுதியாகவில்லை.



முரட்டு ஆட்ட ஹோன்டுராஸ் வீரர்களால் முகத்தில் அடிவாங்கிய ஸ்பெயின் வீரர் பிக்கு

# சுவிட்சர்லாந்து அணியை போராடி வீழ்த்தியது சிலி

(போர்ட்எலிசபெத்)

சிலி, பத்து வீரர்களுடன் ஆடிய சுவிட்சர்லாந்து அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 2ஆவது சுற்று வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்று போர்ட்எலிசபெத்தில் நடந்த எச் பிரிவு ஆட்டத்தில் சிலி, சுவிட்சர்லாந்து அணியை சந்தித்தது.

இதற்கு முந்தைய ஆட்டத்தில் சிலி, ஹோன்டுராஸையும் சுவிட்சர்லாந்து, ஸ்பெயின் அணியையும் எதிர்த்து வெற்றி பெற்றிருந்தன.

இரு அணிகளும் சம பலம் கொண்டது என்பதால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லை. ஆட்டத்தின் 31ஆவது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து வீரர் வாலன் பெக்ராமி சிவப்பு அட்டை பெற்றார்.



சிலி வீரர் பெசேஜார் முகத்தில் முழங்கையால் தாக்கியதற்காக இவருக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டது. தொடர்ந்து சுவிட்சர்லாந்து 10 வீரர்களுடன் ஆட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க வில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் சிலி வீரர்கள் ஆக்ரோசமாக விளையாடினார்கள் உலகிலேயே மிகச்சிறந்த தடுப்பாட்டக்காரர்களைக் கொண்ட அணி சுவிட்சர்லாந்து என்பதால் சிலி வீரர்களால் அதன் தடுப்பாட்டத்தை எளிதில் உடைக்க முடியவில்லை. பெக்ராமி சிவப்பு அட்டை பெற்றதால் சுவிட்சர்லாந்து அணி 6-2-1 என்ற யுத்தியை கையாண்டனர்.

ஆட்டத்தை சமனிலையில் முடித்து விட வேண்டும் என்பதற்காக தடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்தினர். பின்களத்தில் மட்டும் 6 சுவிட்சர்லாந்து வீரர்கள் அரண் அமைத்திருந்தனர்.

ஆட்டத்தின் 65ஆவது நிமிடத்தில் உலகக்கோப்பை வரலாற்றில் சுவிட்சர்லாந்து புதிய சாதனை படைத்திருந்தது. இதற்கு முன் கடந்த 1986 முதல் 1990ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் இத்தாலி 550 நிமிடங்கள் வரை எதிர் அணியிடம் கோல் வாங்காமல் சாதனை படைத்திருந்தது. இந்த சாதனையை சுவிட்சர்லாந்து முறியடித்திருந்தது.

2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை உலகக்கோப்பையில் 559 நிமிடங்கள் எதிர் அணியை பீல்ட் கோல் அடிக்க விடாமல் செய்த அணி என்ற புதிய சாதனையை சுவிட்சர்லாந்து படைத்தது.

சாதனை முறியடிக்கப்பட்ட 9ஆவது நிமிடத்தில் சிலி ஒரு கோல் போட்டது. பார்தெஸ் கொடுத்த பாஸினை தலையர் முட்டி கன்சாலஸ் இந்தக் கோலை அடித்தார்.

இந்த கோலால் சிலி 1-0 என்று முன்னிலை பெற்றது. ஆட்டநேர இறுதி வரை சுவிட்சர்லாந்து வீரர்களால் பதில் கோல் அடிக்க முடியவில்லை. இறுதியில் சிலி வெற்றி பெற்று 3 புள்ளிகளைப் பதிவு செய்தது.

ஏற்கனவே கொண்டுராஸ் அணியையும் சிலி வெற்றி கண்டுள்ளது. எனவே 6 புள்ளிகளுடன் எச் பிரிவில் சிலி முதல் இடத்தில் உள்ளது. சுவிட்சர்லாந்து ஒரு வெற்றி ஒரு தோல்வியுடன் 3 புள்ளிகள் பெற்றுள்ளது.




# மகரூப் வேகத்தில் இந்தியா சுருண்டது இலங்கை அணி இலகுவான வெற்றி



(தம்புள்ள)

பர்வேஷ் மகரூப்பின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் இலங்கை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணி மோதும் ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று தம்புள்ளயில் நடை பெற்ற 6ஆவது போட்டியில் இலங்கை-இந்திய அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார முதலில் துடுப்பெடுத்தாடுமாறு இந்திய அணியை அழைத்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 42.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோகித் சர்மா 69 ஓட்டங்களையும் தோனி 41 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹட்ரிக் சாதனை படைத்த பர்வேஷ் மகரூப் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 42 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ஹேரத் 2 விக்கெட்டுக்களையும் மத்யூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்திய அணியின் ஜடேஜா (0), பிரவீன் குமார் (0), சகீர்கான் (0) ஆகியோரை அடுத்தடுத்து வீழ்த்தி மகரூப் ஹட்ரிக் சாதனை படைத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 37.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 211 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 73 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தனா ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும் உபுல் தரங்க 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் 5 புள்ளிகளைப் பதிவு செய்த இலங்கை அணி தொடரில் 15 புள்ளி பெற்றது.

இதே வேளை நாளை நடைபெறும் இறுதி போட்டியில் இலங்கை-இந்திய அணிகள் மோதுகின்றன.

# கனடா பிரஜாவுரிமைச் சட்டம் கடுமையாக கடைப்பிடிக்கப்படும்

## குடிவரவு அமைச்சர் அறிவிப்பு

கனடாவின் குடியுரிமையானது பயணத்திற்கான கடவுச் சீட்டைப் பெறுவதற்கான ஒன்றல்ல எனவும் அது மிகவும் கனதியான பெறுமதியை உடைய ஒரு தகுதி எனவும் தெரிவித்த கனேடிய குடிவரவு அமைச்சர் அதற்கான சட்டத்தில் பாரிய திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளார்.

இச் சட்டம் இலங்கைத் தமிழர்களில் பலரைப் பாதிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இவ்வகையான சட்டங்களின் மூலம் தண்டனை பெறும் முதலாவது நபராக இலங்கைத் தமிழர் ஒருவரே திகழ்கின்றார்.

குறிப்பாக கனடியப் பிரஜாவுரிமைபெற்ற ஒருவர் ஒரு குற்றச் செயலில் ஈடுபடும் தருணத்தில் அவருடைய குடியுரிமையை மீளப் பெறுவதைத் தீர்மானிக்கும் பொறுப்பை அரசியல் மேல் நிலையாளர்களின் பரிசீலனைக்கே இதுவரை விடப்பட்டிருந்தது.

ஆனால் இனி வரும்காலங்களில் கனடாவில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் குடியுரிமையை மீளப் பெறும் செயலை நீதிமன்றங்களே தீர்மானிக்கும் என சட்டத்திருத்தத்தின் மூலம் நீதிமன்றுகளிற்கு மேலதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் கீழ் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நபரான ஜோதி ரவி சிற்றம்பலம் கனடாவில் குழு வன்முறையில் ஈடுபட்டவர் என்ற வகையில் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

எனினும் அவரை இந்த மாதம் 10 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்திய கனடிய அரசு இது பற்றிய ஒப்புதலை நேற்றே அறிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கனடிய குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி, சிற்றம்பலம் போன்ற குற்றவாளிகள் கனடாவில் வாழ்வதற்கு அனுமதிக்க முடியாத நபர்கள் என்ற வகையில் அவர்களைத் திருப்பி அனுப்புவதே கனடாவின் இறைமைக்கும் அதன் குடிவரவு-குடியகல்வு சட்டங்களுக்கும் இயல்பான ஒன்றெனவும் அதுவே கனடாவை சட்டதிட்டங்களுக்கு அமைய வழிநடத்த உதவும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சராலேயே குடிவரவாளர்களை இறுக்கும் சட்டம் அண்மையில் கொண்டு வரப்பட்ட போதிலும் இப்போது கனடியப் பிரஜாவுரிமை பெற்றவர்களின் மீதே பாயும் ஒரு சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் பல இலங்கைத் தமிழர்களை தர்மசங்கடத்திற்குள்ளாக்கும் நிலையை உருவாக்கியுள்ளார்.

குறிப்பாகப் பயங்கரவாதம் சம்பந்தமான தொடர்புகள், குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றைக் காரணமாக வைத்து கனடியப் பிரஜாவுரிமை ஒருவரிடமிருந்து மீளப் பெறும் இடத்து மேற்படி நபர் கனடாவிலேயே ஏதுமற்ற நாதியாக ஆக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன.

அத்தோடு பிரஜாவுரிமை பெறுவதற்கு முன்னர் இத்தகைய சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர் எனக் கண்டறியப்பட்ட ஒருவருக்குப் பிரஜாவுரிமை வழங்குவதையும் இச் சட்டம் கட்டுப்படுத்தும். (ச-5)

## தோல்வியடைந்த நாடுகளில் இலங்கை 25-வது இடத்தில்

(கொழும்பு)

உலகில் தோல்வியடைந்த நாடுகளின் வரிசையில் இலங்கை 25-வது இடத்தில் இருப்பதாக அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான சஞ்சிகை மேற்கொண்ட ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது.

இதற்கு முன்னர் இலங்கை 22-வது இடத்தில் இருந்தது. இந்த ஆய்வறிக்கையின்படி உலகில் மிகவும் வெற்றிகரமான நாடாக நோர்வே இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

சோமாலியா உலகில் மிகவும் தோல்வியான நாடு என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூக மாற்றம் மற்றும் பொருளாதார சுட்டெண்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வை மேற்கொண்டதாக அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான சஞ்சிகை கூறியுள்ளது. (ச-5)

## 2 ஆயிரம் சிங்கள யாத்திரி...

ஒன்றின் ஏற்பாட்டில் பொஷன் நோன்மதி தினமான நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை நயினாதீவு விகாரையில் விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளது.

இதற்காக தென்னிலங்கையிலிருந்து 2 ஆயிரம் யாத்திரிகர்கள் யாழ்ப்பாணத்துக்குப் பயணமாகியுள்ளனர். இவர்கள் நாளை காலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் வைத்து காலை உணவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து யாத்திரிகர்கள் கீரிமலைக்குச் செல்லவுள்ளனர். அத்துடன் நாளை மாலை நயினாதீவுக்குப் பயணமாவர்.

மறுநாள் நயினாதீவு நாகவிகாரையில் நடைபெறும் பொஷன் நோன்மதி வழிபாடுகளில் அவர்கள் ஈடுபடவுள்ளனர்.

இவர்களுக்கான தங்குமிடம் மற்றும் உணவுகளை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (ச-5)

## கே.பி. உட்பட 21 பிரதிநிதி...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் குற்றஞ்சாட்டுகின்றார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது அவர் இதனைத் தெரிவித்தார். அரச விமானம் ஊடாக அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் பலாலி முகாமுக்குச் சென்றதுடன் கிளிநொச்சிக்கும் சென்று கிளிநொச்சியையும் பார்வையிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடி வெற்றியைப் பெற்றுக் கொடுத்த இராணுவத் தளபதி வெளிநாடு செல்ல அனுமதி மறுக்கும் இந்த அரசு பயங்கரவாதத்தைத் தோற்றுவித்து அதில் முக்கிய பங்காற்றித் தலைமைப் பொறுப்பினைக் கொண்ட கே.பியை மிக சொகுசு ஆடம்பர மாளிகையில் வைத்து உபசரிப்பதாகவும் விஜித்த ஹேரத் விசனம் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கே.பி. உட்பட ஏனையவர்கள் அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையுடனும் பாதுகாப்புடனும் வடக்குக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## உலகத் தமிழ் செம்மொழி...

சிறப்பு மலரை ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா வெளியிடவுள்ளார். அதன் பின்னர் ஜனாதிபதி பிரதீபா பட்டேல், பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அஸ்கோ பர்போலா ஆகியோருக்கு முதல்வர் கருணாநிதி செம்மொழி தமிழ் விருது வழங்கவுள்ளார்.

பேராசிரியர் அஸ்கோ பார்போலா விருது ஏற்புரை நிகழ்த்திய பின், அமெரிக்கப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட், முனைவர் வ.செ.குழந்தைசாமி, இலங்கைப் பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் முதல்வர் கருணாநிதி தலைமையுரையாற்றவுள்ளார். பின்னர் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா சிறப்புரை நிகழ்த்திய பின் ஜனாதிபதி பிரதீபா பட்டேல் பேசவுள்ளார்.

இந் நிலையில் இன்று மாலை 4 மணிக்கு இனியவை நாற்பது என்ற தலைப்பில் தமிழ் இலக்கியம், கலை, வரலாற்றை நினைவூட்டும் வகையில் 40 அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெறவுள்ளது.

இன்று ஆரம்பித்து எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தொடர்ந்து 5 நாள்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் நிகழ்வுகள் இரு விதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மாநாடு பொது நிகழ்வுகளில் மக்கள் பங்கேற்க ஏதுவாக மிகப் பிரமாண்டமான மாநாடு அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இங்குதான் மாநாட்டுக்கான ஆரம்ப விழா இன்று காலை நடைபெறவுள்ளது.

மாலை நடைபெறவுள்ள இனியவை நாற்பது நிகழ்வினையடுத்து நாளை கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம் போன்றன நடைபெறவுள்ளன.

அத்துடன் 25 ஆம் திகதி கவியரங்கம், பட்டிமன்றம், இசை நிகழ்ச்சி, முதல்வர் கருணாநிதி தலைமையில் சிறப்புக் கருத்தரங்கம், கலை நிகழ்ச்சிகள் போன்றன நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 26 ஆம் திகதி கவியரங்கம், கருத்தரங்கம், கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் போன்றன நடைபெறவுள்ளதுடன் மாநாடு நிறைவு நாளான 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிகழ்வில் முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர்களான சிதம்பரம், பிரணாப் முகர்ஜி பங்கேற்கின்றனர்.

மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளிலும் பொதுமக்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை ஆய்வரங்கம், முகப்பரங்கப் பொழிவுகள், கலந்தாய்வரங்கம், கலந்துரையரங்கம், அமர்வரங்கம் மற்றும் சிறப்புப் பொழிவரங்கம் நடக்கும் கொடிசியா தொழிற்காட்சி வளாகத்துக்குள் பங்கேற்பாளர்களை மட்டுமே அனுமதிக்கும் வகையில் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வடக்கு...

அண்மையில் தெரிவித்திருந்தார்.

2009 ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 7 ஆம் திகதி இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட கே.பிக்கு எதிராக இது வரை சட்ட ரீதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

கே.பி. சகல வசதிகளுடன் கொழும்பிலுள்ள விசும்பாயவில் வசித்து வருகின்றார். அத்துடன் அவர் வவுனியாவில் அமைந்துள்ள அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-5)

உலக ஒலிம்பிக் தின
இன்னிசைச் சங்கமம்
இன்று 23/06/2010 மாலை 3 மணிக்கு
யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில்
இசைத் துறையில் 15 வருட அனுபவம். யாழ்.மண்ணில் மட்டுமல்ல; அகில இலங்கையிலும்
வசந்தம் TV, நேத்ரா TV புகழ்
ஜேம்ஸ் அன்ரனின் "பிரண்ட்ஸ்"
இசைக் குழுவினரின் இசை நிகழ்வு சிறப்புற வாழ்த்துகிறோம்.
Super Mall பல்பொருள் அங்காடி கச்சேரி நாசி சவுண்ஸ் வளவாய்
(1752)

## சம்பிக்க...

படுவதற்கான நீண்ட கால பயணத்தின் முன்னேற்றம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜாதிக ஹெலஉறுமய முன்வர வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தான் சார்ந்த சமூகத்தினால் யாழ்.நூல் நிலையம் எரிக்கப்பட்டமைக்கு மின்சக்தி அமைச்சரும் ஜாதிக ஹெலஉறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தமிழ்ச் சமூகத்திடம் யாழ்ப்பாணத்தில் வைத்து மன்னிப்புக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## போர்க் குற்ற...

இலங்கையில் போர் நடைபெற்ற இறுதி நாள்களில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள், அனைத்துலக மனிதாபிமான விதிகளின் மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்கும் குழுவொன்றை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நேற்று நியமித்துள்ளார்.

மூவர் கொண்ட இந்தக் குழுவின் தலைவராக இந்தோனேஷியாவைச் சேர்ந்த முன்னாள் நீதியாணையாளர் மார்சூகி தருஷ்மன் பணியாற்றுவார். அவருடன் அமெரிக்காவைச் சேர்ந்த சட்டவாளர் ஸ்ரீவன் ரட்னர், தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த ஜஸ்மின் சூகா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழு தனது பணியை ஆரம்பித்ததிலிருந்து 4 மாதங்களில் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கும். அவர்கள் எல்லா சம்பவங்களையும் அதற்கான காரணிகளையும் ஆராய்வாளர்கள் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஜனாதிபதி...

அமைச்சர், ஜனாதிபதியுடனான சந்திப்புக் காரணமாக நிகழ்வின் ஆரம்பத்திலேயே புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதிக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான இந்த அவசர சந்திப்பானது இலங்கைக்கான ஜி.எஸ்.பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்துக் கலந்துரையாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதொன்றாகவே தெரிவிக்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட கால எல்லைக்கு இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து வழங்குமாறு ஐரோப்பிய ஒன்றிய பேரவைக்கு ஆலோசனை வழங்கத் தயாராகவேயிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்றுத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5,3)

## ஐ.தே.க...

தாக நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் தான் தாக்குதலுக்குள்ளானபோது தனக்கும் தனது குடும்பத்திற்கும் உதவி செய்த ஜனாதிபதிக்கு இந்தச் சந்திப்பின்போது நன்றியினைத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

அத்துடன் கடந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது அவருக்கும் தனது நன்றியினைத் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்காகவே ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுவதாக ரங்கே பண்டாரவிடம் கேட்டபோது அதற்குப் பதிலளித்த அவர், எவர் என்ன கூறினாலும் அவர்களுக்கெல்லாம் பதில் அளிக்கத் தான் தயாரில்லை என்று சுட்டிக்காட்டினார். (ச-5)

நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்?
கவலையை விடுங்கள்.
A/L, O/L தேவையில்லை
BIT, CIMA-UK, Engineering-USA
MCS
Supported By UNDP/JRRP
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.



டீசல் கார் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள 64-Nissan Doctor Sunny, yom. 1991, Central lock System, Power Steering கடும் சாம்பல் (Silver Gray) கலர் கார் ரூபா 1 120 000/= விற்பனைக்குண்டு. (பேசித் தீர்க்கலாம்) யாழில் நேரில் பார்வையிட முடியும்.
தொடர்புகளுக்கு:- 077 7585913
(C-507)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.